பக்கங்கள்: பதினான்கு

10 MAY 2006

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 சித்திரை 28 திங்கட்கிழமை (10-05-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:167

## சமாதான முயற்சிகள் தொடர்பான ஜனாதிபதியின் நிலைப்பாட்டால்

# கூட்டுக்குள் குழப்பம்

# சீறுகின்றது ஜே.வி.பி.!

## நிலைமையை ஆராய்ந்து முடிவெடுக்க தயாராகிறது அரசின் பங்காளிக் கட்சி

கொழும்பு,மே10

**சமாதான முயற்சிகள், அதில் விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்படும் அந்தஸ்து, அமைதிப் பேச்சுக்களில் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை குறித்து முதலில் பேசுவது ஆகியவை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எடுத்திருக்கும் திட்டவட்டமான நிலைப்பாடு ஆளும் கட்சிக் கூட்டுக்குள் பெருங் குழப்பத்தையும், குமச்சலையும் ஏற்படுத்தியிருப்பதாக அறிய வருகிறது.**

**கூட்டமைப்பு அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி., ஜனாதிபதி தரப்பின் முடிவுகளாலும் திடீர் அறிவிப்புக்களாலும் கடுஞ் சீற்றமும் விசனமும் அடைந்திருப்பதாகக் கூறப்படுகின்றது.**

ஜனாதிபதியினதும், அவரது தரப்பினரதும் முடிவுகளும், அறிவிப்புகளும் கூட்டமைப்புத் தொடர்பான கூட்டுப் பகிர்வையும், கூட்டுப் பொறுப்பையும் மீறுவனவாகும் என்று கருதும் ஜே.வி.பி. தலைமைப்பீடம், அதுகுறித்து ஆராய்ந்து திட்டவட்டமான முடிவை எடுப்பதற்காக இன்று கூடவிருக்கின்றது என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

★ விடுதலைப் புலிகளைத் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றமை -

★ அவர்களோடு மட்டுமே அமைதித் தீர்வுக்கான சமாதானப் பேச்சுக்களை நடத்துவதென அறிவித்துள்ளமை -

★ விடுதலைப் புலிகளின் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை குறித்தே முதலில் பேசுவது என்ற ஏற்

(14ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் ஏகப் பிரதிநிதிகளா? ஏற்க மறுக்கிறது ஜே.வி.பி.!

விடுதலைப் புலிகளைத் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்க முடியாது என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முக்கிய பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. நேற்றுத் தெரிவித்தது.

எனினும், தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு விடுதலைப் புலிகளுடன் அரசு பேசுவதை தாம் எதிர்க்கவில்லை என்றும் அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு ஏகோபித்த பிரதிநிதி அந்தஸ்தையும் சமாதானப் பேச்சுக்களில் அரசுடன் தனிப் பங்காளித் தரப்பு உரிமையும் வழங்கியது முன்னைய ஐ.தே.கட்சி அரசு தான்.

அப்படிச் செய்ததன் மூலம் நாட்டைப் பாதாளத்துக்குள் தள்ளியது அந்த அரசு. அந்தப் பாதாள நிலையில் இருந்து நாட்டை மீட்பதாயின் அந்த நிலைக்குப் புதிய அரசும் இறங்கித்தான் ஆகவேண்டும்.

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு புலிகளுடன் மட்டுமல்லாது சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்புகளுடனும் அரசு பேசவேண்டும்.

புலிகளுடன் நடக்கும் உத்தேச பேச்சுக்களின் அடிப்படையாகப் புலிகள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை விவகாரம் அமையக்கூடாது என்பதில் ஜே.வி.பி. உறுதியாக இருக்கின்றது.

- இப்படி ஜே.வி.பி. மேலும் தெரிவித்திருக்கின்றது.

(எ-க)

## கருணாவின் சகா திருமலையில் பலி!

திருகோணமலை - கண்டி வீதிக்கு அண்மித்ததாக தம்பலகாமம் பிரதேசத்தில் உள்ள மீள்குடியேற்றக் கிராமமான பத்தினிபுரத்தில் நேற்று முன்தினம் இரவு இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மட்டக்களப்பு கிரானைச் சேர்ந்த செல்வராசா குணசீலன் (வயது28) என்பவரே உயிரிழந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டது. இவர் கருணா அணியைச் சேர்ந்தவர் என்று கருதப்படுகின்றது.

துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் கண்டுபிடிக்கப்பட்ட இச்சடலத்தின் சட்டைப்பையில் தேசிய அடையாள அட்டையுடன் காணப்பட்ட கடிதத்தின் பிரகாரம் இவர் கருணா குழுவைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர். (எ-187)

## மட்டு. தாண்டவன்வெளியில் நேற்றுச் சம்பவம்

## இராணுவப் புலனாய்வுச் சிப்பாய் பிஸ்டல் குழுவால் சுட்டுக்கொலை!

மட்டக்களப்பு,மே10

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள மட்டக்களப்புப் பிரதேசத்தில் மட்டக்களப்பு நகரின் மையத்திலிருந்து சுமார் அரைமைல் தொலைவில் உள்ள திருமலை வீதி, தாண்டவன்வெளியில் வைத்து இராணுவப் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர் ஒருவர் இனந்தெரியாதோரால் பிஸ்டலால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

5ஆவது கவச வாகனப் படைப் பிரிவைச் சேர்ந்த வஸந்த கொலம்பகே (வயது 26) என்ற புலனாய்வுப் பிரிவு உறுப்பினரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். இவருடன் வந்த மற்றொரு புலனாய்வுப் பிரிவுச் சிப்பாய் ஓடித் தப்பிப்பிழைத்துக் கொண்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் இருவரும் கதுருவெலவில் இருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ்ஸில் செங்கலடியில் வைத்து ஏறினர் என்று கூறப்படுகின்றது.

(14ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம்: இலங்கைத் தரப்பில் கதிர்காமர் முயற்சி!

### வாஷிங்ரன் விஜயத்தில் அவரின் முக்கியபணி அதுவாம்

இன்று திங்கட்கிழமை முதல் அமெரிக்காவில் உத்தியோகபூர்வ சுற்றுப் பயணம் மேற்கொள்ளவிருக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அமெரிக்காவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை இலங்கை செய்துகொள்வதற்கான வாய்ப்பு வசதிகள் குறித்துத் தீவிரமாக ஆராய்வார் - முயலுவார் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

கடந்தமாத இறுதியில் இந்தியாவுக்குச் சென்றிருந்த கதிர்காமர், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பேச்சு நிலையில் இருக்கும் பாதுகாப்பு ஒப்பந்தத்தைத் துரிதமாக எழுத்துருவம் கொடுத்து நடைமுறைப் படுத்தச் செய்வதற்கான முயற்சியில் - புதுடில்லியில் - தீவிரமாக ஈடுபட்டார் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேபோன்று, பாதுகாப்பு ஒப்பந்தமொன்றை அமெரிக்காவுடன் செய்வதற்கான வாய்ப்புக்களை இந்தத் தடவை அவர் அங்கு இருக்கும்போது ஆராய்வார் என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல், புஷ்ஷின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் கொண்டலிசா ரயிஸ் ஆகியோர் அடங்கலாக உயர் அதிகாரிகளை நேரில் சந்தித்து அவர் உரையாடுவார் என்று வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

அரசு மீள ஆரம்பிக்க உள்ள சமாதானப் பேச்சுக்கள், இரு நாடு

(14ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் யுத்தம் வராது என்பதற்கு உத்தரவாதம் ஏதும் இங்கு இல்லை

### திருமலையில் புதிய அரசியல் பொறுப்பாளர் கருத்து

நாட்டில் மீண்டும் ஒரு யுத்தம் வராது என்பதற்கான எந்தத்திட்டமும் எவரிடமும் இல்லை. தற்காலிகமாகவே யுத்தம் நிறுத்தப்பட்டுள்ளது.

வேறுவழியின்றி விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்துகொண்ட சிறுவர்களைப் பறிப்பதில் கண்ணாக இருக்கிறது யுனிசெவ். அவர்களுக்கான எந்த ஒரு வாழ்வியல் திட்டத்தையும் அது நடைமுறைப்படுத்தவில்லை.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் திருமலைக்கான புதிய அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன்.

நேற்றுப் பிரதேச பத்திரிகையாளர்களைத் திருமலையில் அவர் சந்தித்தார். புலிகளின் புதிய அரசியல் பொறுப்பாளரை அறிமுகம் செய்யும் நிகழ்வாகவே இச்சந்திப்பு ஏற்பாடாகியிருந்தது.

முன்னாள் அரசியல் பொறுப்பாளர் சி.திலக் தலைமையில் நடந்த

(14ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். வாசிகள் சென்ற ஹை-ஏஸ் கந்தானையில் பஸ்ஸுடன் விபத்து!

### இருவர் பலி; நால்வர் படுகாயம்

கொழும்பு,மே10

நீர்கொழும்பு வீதியில் - கந்தானைச் சந்திக்குச் சமீபமாக பிரதான வீதியில் நேற்றுக்காலை 7மணியளவில் இடம்பெற்ற ஹை-ஏஸ் - பயணிகள், பஸ் விபத்தில் யாழ் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி ஆசிரியை ஒருவரும், வான் சாரதியும் அந்த இடத்தில் உயிரிழந்தனர்; நால்வர் காயம் அடைந்தனர்.

யாழ். சுண்டுக்குழி மகளிர் கல்லூரி ஆசிரியையான திருமதி பாலகுமரன் இரஞ்சினிதேவி (வயது39), சாரதியான கல்கிசையில் வசிக்கும் சாவகச்சேரியைச் சேர்ந்த க.பாலச்சந்திரன் (வயது35) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

வெளிநாட்டில் இருந்து நேற்றுக் காலை கட்டுநாயக்க வரவிருந்த உற

(14ஆம் பக்கம் பார்க்க)

ரன் சஹன ஈட்டுக் கடனாக ரூபா 5,000/-ஐப் பெறும்போது 40மில்லியன் ரூபா பெறுமதியான பரிசுகளை வெல்லும் வாய்ப்பு

அவசரமாக பணம் தேவையா? அருகிலுள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கிளைக்கு விரையுங்கள். ரூபா 5,000/- அல்லது அதற்கு மேற்பட்ட ஒவ்வொரு ரன் சஹன ஈட்டுக் கடனுக்கும் நாம் அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) சான்றிதழ்களை அன்பளிப்பாக வழங்குகின்றோம்.

இச்சலுகை 2004 ஒக்டோபர் 15 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

வட்டி:
*14% ஸ்திரி கணக்கு வைத்திருப்பவர்களுக்கு
*15% ஏனையோருக்கு

அதிர்ஷ்ட வெள்ளி (ரிதி ரேகா) பரிசு விபரங்கள்,
- 1வது பரிசு 5மில்லியன் பெறுமதியான வீடு அல்லது பணம்.
- 2வது பரிசு 1.5மில்லியன் பெறுமதியான வாகனம் அல்லது பணம்.
- 3வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 10,000 பெறுமதியான 10 பரிசுகள்.
- 4வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 5,000 பெறுமதியான 20 பரிசுகள்.
- 5வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 1,000 பெறுமதியான 2000 பரிசுகள்.
- 5வது பரிசு ஒவ்வொன்றும் ரூபா 500 பெறுமதியான 2400 பரிசுகள்.



NSB

NSB தேசிய சேமிப்பு வங்கி

# தனித்தரப்புத் தராதமை முஸ்லிம்களுக்குப் பேரதிர்ச்சி

## முஸ்லிம் காங்கிரஸ் கூறுகின்றது

கொழும்பு,மே10

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதானப் பேச்சுக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மாத்திரமே மேற்கொள்ளப்படும் என்ற சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் அறிவிப்பு முஸ்லிம் சமூகத்துக்கு பெரும் அதிர்ச்சியைத் தந்திருக்கிறது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகம் எம்ரி. ஹஸன் அலி எம்.பி. தெரிவித்தார்.

அரசு வெளியிட்டுள்ள அறிவிப்புத் தொடர்பாகத் ஹஸன் அலி எம்.பி. உதயனுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது:-

கடந்த ஐ.தே.மு. ஆட்சிக் காலத்தில் விடுதலைப் புலிகளுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களின்போது முஸ்லிம்களும் ஒரு தனித்தரப்பாக பேச்சு மேசையில் அமர்வதற்கான கோரிக்கை வலுப்பெற்றிருந்தது. அதனை ஐ.தே.மு. அரசும், சர்வதேச சமூகமும் ஏற்றுக் கொண்டிருந்தன. அதேவேளை, மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் அரசு தரப்பில் முஸ்லிம் பிரதிநிதியாகக் கலந்து கொண்டு தமது பங்களிப்பை வழங்கி வந்தார்.

இந்நிலையில், புதிய கூட்டணி அரசு முஸ்லிம் தனித்தரப்புக் கோரிக்கையை முற்றாக மறுதலிக்கும் வகையில் தீர்மானம் மேற்கொண்டிருப்பது மிகவும் கவலைக்கும் கண்டனத்துக்கும் உரிய விடயமாகும்.

அரசின் நிலைப்பாடு தொடர்பாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்றக் குழுவும், அரசியல் அதியுயர் பீடமும் இன்று (திங்கள்) இரவு கூடி ஆராயவிருக்கின்றன. கட்சியின் தலைமையகமான தாருஸ்ஸலாமில் இரவு 8.30 மணிக்கு நடைபெறவுள்ள கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படும்.

- இவ்வாறு செயலாளர் நாயகம் ஹஸன் அலி எம்.பி. தெரிவித்தார்.

இதேவேளை -

"முஸ்லிம்கள் தனித்தரப்பாகப் பேச்சில் கலந்துகொள்ளவில்லை. என்றால் பேச்சுக்கள் வெற்றியளிக்க மாட்டா. அவர்களுக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவும் அளிக்காது" - என்று அதன் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். (க)

# எரிபொருள்களின் விலைகள் விரைவில் அதிகரிக்கப்படலாம்

கொழும்பு,மே10

எரிபொருளின் விலையை அதிகரிக்குமாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அரசுக்கு சிபாரிசு செய்துள்ளது.

பெற்றோல் மற்றும் டீசலின் விலைகளை 2 ரூபாவால் அதிகரிக்கும்படி கூட்டுத்தாபனம் சிபாரிசு செய்திருப்பதாக அறியப்படுகின்றது. இந்த எரிபொருள்களுக்கு அளிக்கப்படும் பெரும் தொகை மானியத்தினால் ஏற்பட்டுள்ள இழப்பை சமாளிக்கக்கூடிய நிலை வரும்வரை மாதாந்தம் இரண்டு ரூபாய் வீதம் அதிகரிக்கும்படி கூட்டுத்தாபனம் சிபாரிசு செய்துள்ளது.

எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்படும் பட்சத்தில் வாழ்க்கைச் செலவும் எதிர்வரும் மாதங்களில் அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. உலக சந்தையின் இன்றைய நிலைவரத்துக்கமைய எரிபொருள் விலைகள் அதிகரிக்கப்படாவிடின் எரிபொருள்களுக்கான மானியத்தை இதுவரை காலமும் சமாளித்துவந்த திறைசேரியே இனிமேலும் சமாளிக்க வேண்டி வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்போதைய உலகசந்தை விலைகள் தொடர்ந்து ஏறுமுகமாக இருக்குமானால் எரிபொருள்களின் விலைகளை அதிகரிப்பது தவிர்க்கமுடியாமல்போய்விடும் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரி ஜலியா மெதகம கூறியிருக்கிறார். எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இதுபற்றி திறைசேரிக்கு எழுதியுள்ளோம். இந்த வாரத்தில் முடிவு தெரியவரும் என்று அவர் கூறினார். (ப)

# பேச்சுக்களில் முஸ்லிம்களின் தரப்பாக சுயேச்சைக்குழு பங்கேற்க வேண்டும்

## அலவி மௌலானா கூறுகிறார்

கொழும்பு,மே10

புலிகளுக்கும் அரசுக்குமிடையில் அமைதிப்பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும்போது முஸ்லிம்களும் ஒரு தரப்பாகக் கலந்துகொள்வதானால், அது முஸ்லிம் காங்கிரஸ் குழுவாக இருக்க முடியாது. அது ஒரு தனியான சுயேசசைக் குழுவாகவே இருக்கவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார் மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா.

அப்படியான ஒரு குழு பல்வேறு முஸ்லிம் அமைப்புக்களின் பிரதிநிதிகளைக் கொண்டிருக்க வேண்டும். எந்தவொரு முஸ்லிம் கட்சியிலிருந்தும் அல்ல; முஸ்லிம் சமயத் தலைவர்களும் இணைத்துக்கொள்ளப்படலாம் என்று கூறினார் அலவி மௌலானா.

முஸ்லிம் காங்கிரஸ் ஏற்கனவே உள்ளகக்குளறுபடிகளுக்கு உள்ளாகியுள்ளது. அது மூன்று தனிப்பிரிவுகளாகவும் பிரிந்து நிற்கிறது. உள்ளகப் பிரச்சினைகளுக்குள்ளாகி, மூன்று பிரிவுகளாகப் பிரிந்து நிற்கும் ஒரு கட்சியினால் பிரதிநிதித்துவக் குழுவொன்றை உருவாக்குவது சாத்தியமில்லை என்றார் ஆளுநர். ரவூப் ஹகீம் எதையும் சாதித்தவில்லை, வெறுமனே பெரிய சத்தங்களை மட்டும் எழுப்பிக் கொண்டிருக்கிறார். வடக்கு - கிழக்கு முஸ்லிம்களுக்காக இதுவரை அவர் எதனையும் சாதித்தது கிடையாது என்றார் ஆளுநர் அலவி மௌலானா.

சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி இதேவிதமான கருத்தை வெளியிட்டுள்ளதுடன் அரசியல் கட்சிகளல்லாத சுயேச்சையான தனிநபர்களைக்கொண்ட தானதொரு குழுவே முஸ்லிம்கள் தரப்பில் கலந்துகொள்ளவேண்டும் - என்றார். (ப)

### சுகவீனம் காரணமாக போராளி உயிரிழப்பு!

சுகவீனம் காரணமாகத் தமது பேராளியான வீரவேங்கை தேன்மலர் (மகாலிங்கம் பிரதீபா - கண்டாவளை, கிளிநொச்சி) நேற்றுச் சாவடைந்தார் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (எ-3)

# கைதிகள் போராட்டம் நேற்றும் தொடர்ந்தது

வெலிக்கடைச் சிறைச்சாலைக் கூரை மேல் ஏறி அமர்ந்திருந்து உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருக்கும் கைதிகளின் போராட்டம் நேற்றும் தொடர்ந்து இடம்பெற்றது. அவர்களுக்கு ஆதரவாக மேலும் 12 கைதிகள் இணைந்து கொண்டனர்.

பிரதமரின் பாரியார் திருமதி ராஜபக்ஷ, சிறைச்சாலை ஆணையாளர் ரூபி ழ்சூக் ஆகியோர் நேற்று வெலிக்கடை சிறைச்சாலைக்குச் சென்று கைதிகளைச் சந்தித்துப் போராட்டத்தைக் கைவிடுமாறு கோரிக்கை விடுத்தனர். அதற்கு மறுப்புத் தெரிவித்த கைதிகள், தமது கோரிக்கை நிறைவேறும் வரை போராட்டம் தொடரும் என்று கூறினர்.

மரணதண்டனை விதிக்கப்பட்ட 32 சிறைக்கைதிகள் தமது தண்டனையை ஆயுள்தண்டனையாக மாற்றும்படி கோரியே இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கைதிகளுக்கு வருடாவருடம் ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கும போது மரணதண்டனைக் கைதிகளின தண்டனை ஆயுள்தண்டனையாக மாற்றப்படுவது வழக்கம். மரணதண்டனை பெற்ற கைதிகள் நன்னடத்தை அடிப்படையில் தண்டனைக்காலம் குறைக்கப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்படுவர்.

வெலிக்கடைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மரணதண்டனை பெற்ற கைதிகளுக்கு இந்த ஆண்டு இந்தச் சலுகை வழங்கப்படவில்லை. இதற்கு ஆட்சேபம் தெரிவித்தே மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் கூரை மீது அமர்ந்து சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (க)

## கொத்மலைத் திட்டத்தை எதிர்த்து

# தலவாக்கலை நகரில் நேற்று ஆர்ப்பாட்டம்

மின் உற்பத்திக்கான மேல் கொத்மலை நீர்த்தேக்கத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று தலவாக்கலை நகரில் நூற்றுக்கணக்கானவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தேசிய வளங்களையும் மனிதவுரிமைகளையும் பாதுகாக்கும் இயக்கத்தின் தலைமையில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் அரசசார்பற்ற அமைப்புகள் சிலவும் இணைந்துகொண்டன.

தலவாக்கலை பஸ்தரிப்பிடத்துக்கு அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் "மலையகத்தின் சூழலுக்கு மாசு ஏற்படுத்தும் இந்தத் திட்டத்தை கைவிடு!", "நீண்டகால வட்டிக்கு ஜப்பானிடம் பெற்ற கடனைத் திருப்பிக் கொடுத்து விடு!", "இயற்கை வளங்களை இல்லாதொழிக்கத் தீட்டப்படும் சதித்திட்டம் இது!" - என்ற கோஷங்கள் ஆர்ப்பாட்டக்காரர்களால் எழுப்பப்பட்டன.

இ.தொ.காங்கிரஸின் உபதலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான [illegible]த்து சிவலிங்கம், அக்கட்சியின் எம்பியான ஜெகதீஸ்வரன் மற்றும் நுவரெலியா பிரதேச சபைத் தலைவர் ஆர்.சக்திவேல், புதிய ஜனநாயகக் கட்சியின் பிரமுகர் இ.தம்பையா, மனித வுரிமைகள் இல்லத்தின் மேகலா சண்முகம், தொழிற்சங்கவாதி லீனஸ் ஜயதிலக போன்றோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டிருந்த மேடையில் தோன்றி முக்கியஸ்தர்கள் உரையாற்றினர்.

### தகராறு செய்த சிங்களவர்கள்

அதேவேளை -

இந்த் ஆர்ப்பாட்டம் நடைபெற்ற சமயம் அப்பகுதியில் வசிக்கும் சிங்கள கிராமவாசிகள் சிலர் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு நடுவே புகுந்து, "மேல் கொத்மலைத் திட்டம் தமக்கு வேண்டும்" எனக் கோஷம் எழுப்பிய வண்ணம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு தகராறு செய்தனர்.

இதனையடுத்து பொலீஸார் தலையிட்டு அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தினர். சிறிது நேர பதற்றத்துக்குப் பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியது. லிந்துல, பத்தனை, அக்கரபத்தனை, நுவரெலியா போன்ற பொலீஸ் நிலையங்களைச் சேர்ந்த பொலீஸாரின் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. (க)

# பள்ளிமுனை உதைபந்தாட்ட வீரர்கள் யாழ்ப்பாணத்தில் கௌரவிக்கப்பட்டனர்

யாழ்ப்பாணம்,மே10

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் பகுதி II இல் வெற்றியீட்டிய மன்னார், பள்ளிமுனை சென். லூசியா விளையாட்டுக் கழக வீரர்கள், யாழ். மாவட்ட விளையாட்டுத் துறையினரால் வெகுமதிகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

தமிழீழ விளையாட்டுத் துறையின யாழ். மாவட்டப் பிரிவு ஏற்பாடு செய்த இந்தக் கௌரவிப்பு நிகழ்வு நேற்று மாலை 4 மணியளவில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் யாழ். உதைபந்தாட்டச் சங்கத் தலைவர் கிளிபேட் அன்ரனிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

கௌரவிப்பு நிகழ்வின் ஆரம்பத்தில் மன்னார், பள்ளிமுனை சென். லூசியா கழகம் மற்றும் யாழ். பாடும்மீன் விளையாட்டுக் கழகம் ஆகிய [illegible] வீரர்கள் மங்கள வாத்தியங்கள் [illegible] மைதானத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

அங்கு பொதுச் சுடரினை யாழ். உதைபந்தாட்ட லீக் செயலாளர் எஸ். பிரான்ஸிஸ், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் தலைவர் டி.எம்.வேதாபரணம், வலிகாமம் உதைபந்தாட்ட லீக் செயலாளர் எஸ்.நடராசா ஆகியோரும் - யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், சுரேஷ் பிரேமச்சந்திரன், செ.கஜேந்திரன் மற்றும் திருமதி பத்மினி சிதரம்பரநாதன் ஆகியோரும் ஏற்றிவைத்தனர்.

அதனை தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியினை தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா ஏற்றிவைத்தார். யாழ்.மாவட்டக் கொடியினை யாழ் மாவட்ட விளையாட்டு அதிகாரி றொஹான் இராஜசிங்கவும், மன்னார் மாவட்ட கொடியை மன்னார் உதைபந்தாட்ட லீக் தலைவர் எஸ்.அன்ரனும் ஏற்றிவைத்தனர்.

அகில இலங்கை ரீதியாக வெற்றி பெற்று சுவீகரித்த வெற்றிக் கிண்ணத்தை பள்ளிமுனை சென். லூசியா விளையாட்டுக் கழகத் தலைவர், தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி.பாப்பாவிடம் கையளித்தார்.

அதனைத் தொடர்ந்து சென். லூசியா விளையாட்டுக் கழக வீரர்களுக்கு, யாழ்ப்பாணம், வலிகாமம் மற்றும் பருத்தித்துறை ஆகிய உதைபந்தாட்ட லீக்குகள் மற்றும் விளையாட்டுக் கழகங்கள் சார்பாக வெகுமதிகள் வழங்கப்பட்டன.

யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.கே.சிவாஜிலிங்கம், திருமதி பத்மினி சிதம்பரநாதன், செ.கஜேந்திரன் ஆகியோரும், வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத்துறை உதவிப் பணிப்பாளர் கே.டபிள்யு.விமலராஜனும் வீரர்களுக்கு பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர். அதனைத் தொடர்ந்து பள்ளிமுனை சென்லூசியா விளையாட்டுக் கழகத்திற்கும் யாழ்.பாடும்மீன் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையிலான காட்சி உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது. இந்த ஆட்டத்தில் சென்.லூசியா வி.க 1-0 கோல் கணக்கால் வெற்றியீட்டியது.

இந்த நிகழ்வில் ஆயிரக்கணக்கான ரசிகர்கள் கலந்துகொண்டு வீரர்களை உற்சாகப்படுத்தினர்.(எ-5-6-ரி)







மன்னார் பள்ளிமுனை சென்.லூசியா விளையாட்டுக்கழக வீரர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்ட தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா, மற்றும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், விளையாட்டு வீரர்கள் ஆகியோர் மங்களவாத்தியம் சகிதம் துரையப்பா விளையாட்டு அரங்கிற்கு அழைத்துச்செல்லப்படுவதையும், விளையாட்டு வீரர்கள் அணிவகுத்துச் செல்வதையும் முதலிரு படங்களில் காணலாம்.


அகில இலங்கை ரீதியல் தாம் வெற்றிபெற்று சுவீகரித்த வெற்றிக்கிண்ணத்தை பள்ளிமுனை சென்.லூசியா விளையாட்டுக்கழகத் தலைவர், தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பாவிடம் கையளிப்பதை அடுத்துள்ள படத்திலும் காணலாம்.

(படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)

# சோதனைகளை விஞ்சும் சாதனைகள்!



1992-1993 ஆம் ஆண்டில் கொழும்பு கத்தாராம விளையாட்டரங்கில் பலமிக்க ஆஸ்திரேலிய அணியின் கிறெயிக் மெக்டொமொட்டை தனது முதல் அரங்கேற்றத்திலேயே வீழ்த்தி, நேற்று ஸிம்பாப்வே ஹரே விளையாட்டரங்கில் அனுபவம் குறைந்த ஸிம்பாப்வே அணியைத் தோற்கடிக்கும் வரை முத்தையா முரளிதரன் தனது ரப்பர் போல ஈய்ந்துகொடுக்கும் வலதுகை மணிக்கட்டை சுழற்றிய படியே முன்னேறினார். 'ஓவ்ஸ் பின்னர்' 'டொர்ப் ஸ்பின்னர்' 'டூஸ்டர்' என்று அவரது சுழல்பந்து வீச்சுக்களை எதிர்கொண்ட திறமைமிக்க துடுப்பாட்டகாரர்கள் சுருண்டுபோயிருக்கிறார்கள்.



ஒருவரும் தடுப் முடியாது.

519 விக்கெட்டுக்களை வீழ்த்துவதற்கு கோர்ட்னி வோல்ஷ் 132 டெஸ்ட்களில் விளையாடியிருக்கும் நிலையில் முரளி 89 டெஸ்ட்களில் மட்டுமே விளையாடி வோல்ஷின் சாதனையை சமன் செய்துகொண்டுள்ளார்.

32 வயதே ஆன முரளி இன்னும் பல டெஸ்ட்களில் விளையாடவுள்ளதுடன் வீழ்த்தும் விக்கெட்டுக்களின் எண்ணிக்கையையும் உயர்த்தவுள்ளார்.

கோர்ட்னி வோல்ஷின் சாதனையை முரளி முறியடிப்பார் என்பது எதிர்பார்க்கப்பட்டவொன்றுதான். ஒரு சிறு பார்வையாளர் மத்தியில் ஒரு பலம் குறைந்த அணிக்கு எதிராக விளையாடிததான் தனது சாதனையை நிகழ்த்துவேன் என்று முரளி நினைத்துப் பார்த்திருக்கமாட்டார். என்றாலும், அவர் தனது குறிக்கோளை சாதனையை 520ஆவது விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம் நிலைநாட்டினார் என்பதை மறுக்கவியலாது. ஹராரேயில் ஸிம்பாப்வேயுடனான டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் முலக்கி எங்கலாவின் விக்கெட்டை வீழ்த்தியதன் மூலம் முரளி தனது சாதனை இலக்கை அடைந்தார்.

முரளியின் வெற்றிச் சாதனைக்குரிய விக்கெட்டுகளில் பெரும்பாலானவை (520 இல் 337) இலங்கையிலேயே வீழ்த்தப்பட்டுள்ளன.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக 77 விக்கெட்டுக்களை (உள்நாட்டிலும், வெளியிலும்) வீழ்த்தியுள்ளார். அடுத்து அதிகமான விக்கெட்டுக்கள் ஸிம்பாவேக்கு எதிராகவும், மூன்றாவது இங்கிலாந்துடனும் (இங்கிலாந்து துடுப்பாட்டக்காரர்களை 69 தடவை) முரளி திணறடித்துள்ளார்.


ஆஸ்திரேலியாவின் 50, இந்தியாவின் 57 விக்கெட்டுகள் இவர் கொய்துள்ளார்.

இந்த விக்கெட் சாதனையில் ஆசியாவில் 401உம், தென்னாபிரிக்காவில் 47உம் வீழ்த்தப்பட்டுள்ளன.

முரளியின் பந்துவீச்சுக்கு அதிகமாக இலக்காகியுள்ள துடுப்பாட்டக்காரர்களைப் பார்த்தால் சிம்பாப்வேயின் கிரான் பிளவர் பத்துத் தடவைகள (இம்முறை விளையாடவில்லை) முரளியால வீழ்த்தப்பட்டிருக்கிறார். முரளியின் சாதனைகள் தொடர்ந்து நிகழப்போகின்றன. 550 மட்டுமல்ல 600 வரையும் போகலாம். அதே சமயம் 517 விக்கட்டுகளுடன் இருக்கும் வோர்ன் முரளியைப் பின்தொடரும் வாய்ப்பு இருக்கிறது. கபில் தேவின் சாதனை வோல்ஷால் முறியடிக்கப்பட்டது. வோல்ஷை முரளி முறியடித்தார். அடுத்து ஆஸ்திரேலியா, ஸிம்பாப வேக்கு போகவிருக்கிறது. வோர்ன் அங்கு தனது சாதனையைத் தொடர்வாரா? அல்லது முரளி தனது சாதனையை மேலும நிலை நிறுத்துவாரா என்பதனைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

அதற்கிடையில் சாதனை வீரன் முத்தையா முரளிதரன் தனது உடல் நிலை இடம் கொடுத்தால ஆயிரம் விக்கெட்டுக்களை வீழ்த்தி எவரும் நெருங்க முடியாத சாதனையை நிலைநாட்டுவேன் என்று உறுதிபடக்கூறியுள்ளார். அவரது எண்ணம் நிறைவேற சாதனைகள தொடர எல்லாம் வல்ல இறைவனை முரளியின் சார்பாக நாம் வேண்டுவதுடன் சாதனையை நிலைநாட்டியமைக்கு உதயன் வாசகர்கள் சார்பாக பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்வோம்.

**வசந்தன்**







நான் இருக்கப் பயம் ஏன்?

முத்தையா முரளிதரன 1972ஆம் ஆண்டு கண்டியில் பிறந்தார். இலங்கை விளையாட்டுக் கழகத்திற்காகவும் தமிழ் யூனியன் கிரிக்கெட் அணிக்காகவும் விளையாடிவந்தார்.

14 வயதில் வேகப் பந்து வீச்சாளராக ஆரம்பித்த இவர் பயிற்சியாளரின் ஆலோசனையின் பேரில் சுழற்பந்து வீச்சாளராக மாறினார். அதன் பின் தொடர்ந்து அதனை யேபின்பற்றி வருகிறார். பாடசாலை வாழ்க்கையின் இறுதிக்காலத்தில் இரண்டு பருவங்களில் 100 விக்கெட்டுக்கள் எடுத்திருந்தார். அந்த ஆண்டில் "பாட்டா பாடசாலைகிரிக்கெட் வீரர்" என விருது வழங்கிப் பாராட்டப்பட்டார்.

கிரிக்கெட் வாழ்வில் முரளி தனது முதல் டெஸ்ட் போட்டியை கொழும்பு பிரேமதாஸ விளையாட்டரங்கில் 1992 - 1993 ஆண்டளவில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக நடந்த டெஸ்டின் 2ஆவது இன்னிங்ஸில் ஆரம்பித்தார். அதன் பிறகு மிகவும் கவனமாகவும் கடினமாகவும் உழைத்து தனது பந்து வீச்சின் தரத்தை உயர்த்திக் கொண்டார். அவர் புதுவிதமான 'மர்ம' பந்து வீச்சுத் தொடர்பாக பயிற்சிகளை செய்து வருகிறார். ஆனால் அதனை இன்னும் நேர்த்தியாக்கிக் கொள்ளவிருப்பதால் அது பற்றிய விவரங்களை அதிகம் வெளியிட முடியாமலிருக்கிறார். (ப)

# அமெரிக்காவில் ஈராக்கியர் சித்திரவதை; புகைப்படங்கள், வீடியோக்கள் உள்ளன

## அமெரிக்க பாதுகாப்புச் செயலர் தெரிவிக்கிறார்



வாஷிங்ரன்,மே10

ஈராக்கிலுள்ள அமெரிக்கச் சிறையில் ஈராக்கியர்கள் சித்திரவதை செய்யப்பட்டது தொடர்பாக, இன்னும் வெளியிடப்படாத புகைப்படங்கள், வீடியோ காட்சிகள் நிறைய உள்ளன என்றார் அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட்.

சிறையில் ஈராக்கியர்கள் நடத்தப்பட்ட விதம் கொடூரமானது; மனிதத் தன்மையற்றது. அத்தகைய காட்சிகளைக் கொண்ட புகைப்படங்கள், வீடியோக் காட்சிகள் இன்னும் நிறைய உள்ளன. என அரசு குழுவிடம் தெரிவித்தார் ரம்ஸ்பீல்ட்.

இந்த விவகாரம் சம்பந்தப்பட்ட புகைப்படங்கள் குறித்து, அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் மற்றும் சர்வதேச சமூகம் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். உலகத்தின் கண்களில் இப்புகைப்படங்கள் பயங்கரமாகத் தெரிகின்றன.

இப்பிரச்சினையை சிலர் அரசியலாக்க முயற்சிக்கிறார்கள். அதற்காக எனது பதவியை நான் ராஜினாமாச் செய்யமுடியாது.

இவ்விவகாரம் தொடர்பான விசாரணைகளை ஆராய, உயர் நிலைக் குழு அமைக்கப்படும் எனவும் கூறினார்.

ஈராக்கில் அடுத்த மாத இறுதியில் அமையவிருக்கும் அரசுக்கு குறைந்த அளவிலான அதிகாரங்களே தரப்பட வேண்டும் என ஐ.நா. பிரதிநிதி லக்தர் கூறினார்.

இந்த அரசு ஜூன் முதலாம் திகதிக்கு முன்பாக, ஐ.நா. தீர்மானத்தின அடிப்படையில் ஒரு தலைவர், ஒரு குடியரசுத் தலைவர், இரு உதவிக் குடியரசுத் தலைவர்கள் தெரிந்தெடுக்க வேண்டும் - என்றார். (8)

# பின்லேடன் கொலை மிரட்டலால் எனது பணிகளுக்குப் பாதிப்பில்லை

## கோபி அனான் தெரிவிக்கிறார்

நியுயோர்க்,மே10

சர்வதேச பயங்கரவாதி ஒஸாமா பின்லேடன் விடுத்துள்ளதாகக் கூறப்படும் கொலை மிரட்டலால், தமது பணிகள் பாதிக்கப்படாது என ஐ.நா. பொதுச் செயலர் கோபி அனான் நிருபர்களிடம் தெரிவித்தார்.

எனினும், இந்தக் கொலை மிரட்டலைத் தாம் தீவிரமாகக் கருத்தில் கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கோபி அனானைக் கொல்பவர்களுக்கு 10 கிலோ தங்கம் பரிசாகக் கிடைக்கும் என பின்லேடன் அறிவித்துள்ளதாக இணையத்தளங்களில் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் இவ்வாறு கூறியுள்ளார் அவர்.

இம்மிரட்டல் அனானுடைய பணிகளையும் ஈராக்கிலுள்ள ஐ.நா.பிரதிநிதி லக்தரின் பணிகளையும் பாதித்துள்ளதா எனக்கேட்டதற்கு நாங்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுவிட்டு தொடர்ந்து பணிகளைச் செய்துகொண்டிருக்க வேணடும் என நினைக்கிறேன் என்றார்.

இம்மிரட்டலைத் தொடர்ந்து 39 மாடி ஐ.நா.தலைமையகத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

புதிய கதவுகள், விளக்குகளை அமைப்பது உட்பட பல்வேறு புதிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, பாதுகாப்பைப் பலப்படுத்த ரூ.94 கோடி செலவிடவுள்ளது ஐ.நா. (8)

# பஸ்ஸில் தேர்தல் சுற்றுப்பயணம் செய்யும் புஷ்

விஸ்கான்சின் (அமெரிக்கா),மே10

அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிடும் ஜோர்ஜ் புஷ், பஸ்ஸில் சுற்றுப் பயணஞ்செய்து ஆதரவு திரட்டினார்.

அதிபரின் செய்தித் தொடர்பாளர் டெர்ரி ஹால்ட் இதுதொடர்பாகக் கூறியதாவது:-

இதுபோன்ற சுற்றுப்பயணங்கள் குறித்த செய்திகள் உள்ளூர் பத்திரிகைகளில் இடம்பெறும். நவம்பர் 2 இல் நடைபெறும் தேர்தல் முடிவுகளைப் பெரும்பாலும் உள்ளூா பத்திரிகைகளே நிர்ணயிக்கும். இப்பத்திரிகைகள் வெளியிடும் செய்திகள் குறித்து உள்ளூர் மக்கள் பேசுவார்கள்.

21ஆம் நூற்றாண்டில் கூட அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் பாராட்டிப் பேசுவதுதான் சிறந்த தேர்தல் பிரசாரமாக அமைகிறது.

தொலைக்காட்சி விளம்பரங்களை விட இதுபோன்ற சுற்றுப் பயணம் மிகவும் பயனளிக்கும். ஈமெயில், தபால், தொலைக்காட்சி, வானொலி ஆகியவற்றின் மூலம் பிரசாரம் செய்யும் நவீன முறைகளை அதிபர் புஷ் கைவிட்டுவிட வில்லை என்றார் டெர்ரி ஹால்ட்

அயோவா, விஸ்கான்சின், ஒஹியோ, மிசிகன் ஆகிய மாநிலங்களில் பஸ்ஸில் சுற்றுப்பயணம் செய்தார் புஷ். (8)

# சதாம் ஹுசைனின் மகன் கொலை; புதிய தகவல்கள் வெளியாகின

துல்சா (அமெரிக்கா),மே10

ஈராக் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனின் மகன் உதய் ஹுசைனும அவரது தம்பி குவாசி ஹுசைனும் கொல்லப்பட்டது குறித்து புதிய தகவலை அமெரிக்க ராணுவ வீரர் ஒருவர் வெளியிட்டுள்ளார்.

உதய் ஹுசைனும் அவரது தம்பி குவாசி ஹுசைனும் தங்கியிருந்த மாளிகையைச் சுற்றிவளைத்துத் தாக்குதல நடத்தியதில் அவர்கள் கொல்லப்பட்டதாக அமெரிக்க இராணுவம் கூறியிருநதது.

ஆனால், அவர்கள் ஒளிந்திருந்த இடத்தில் இருந்து தந்திரமாக வெளியே வரச்செய்ததாக அமெரிக்க ராணுவ வீரர் ஜெரிமி ஹுமன் கூறியுள்ளார்.

ஹுமனைப் பாராட்டும் அமெரிக்க இராணுவ ஆவணம் ஒன்று ஈராக்கில் பல்வேறு பணிகளை முடிக்குமாறு அவருக்கு உத்தரவிடப்பட்டதாகத் தெரிவிக்கிறது. உதய் ஹுசைனை வெளியே வரச்செய்தது குறித்து அந்த ஆவணத்தில் எதுவும் கூறப்படவில்லை.(8)

# விமானி அறைக்குள் புகமுயன்ற பயணியால் பாகிஸ்தான் விமானத்தில் பரபரப்பு!

இஸ்லாமபாத்,மே10

நடுவானில் விமானி அறைக்குள் நுழைய முயன்ற பாக். பயணி ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவர் விமானத்தைக் கடத்த முயன்றாரா என்பது குறித்து தீவிர விசாரணை நடத்தப்பட்டுவருகிறது.

துபாயில் இருந்து இஸ்லாமாபாத்துக்கு பயணிகளுடன் வந்த விமானத்தில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது. பயணி ஒருவர் விமானி அறைக்குள் வலுக்கட்டாயமாக நுழைய முயன்றார். இதனால் விமானப் பயணிகள் மத்தியில் பீதி கிளம்பியது. விமான ஊழியர்கள் அவரை மடக்கிப் பிடித்தனர். பின்னர் அந்தப் பயணி இஸ்லாமாபாத் விமான நிலைய பாதுகாப்புப் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அவரிடம் நடத்திய விசாரணையில், அந்தப் பயணி பாகிஸ்தானைச் சேர்ந்தவர் என்று தெரியவந்தது. விமானம் மெதுவாக செல்வதால் வேகமாகச் செலுத்தும்படி விமானிகளிடம் சொல்லவே விமானி அறைக்குள் தான் செல்ல முயன்றதாக அவர் குறிப்பிட்டார்.

எனினும், அவர் விமானத்தைக் கடத்த முயன்றாரா என்ற கோணத்தில் தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகவலை பாக். தகவல்துறை அமைச்சர் ஷேக் ரஷித் அகமது தெரிவித்தார்.

பாகிஸ்தானில் இருந்து ஐக்கிய அரபு எமிரேட்டுக்குச் செல்லும் விமானத்தைக் கடத்தவோ அல்லது குண்டு வைத்துத் தகர்க்கவோ தீவிரவாதிகள் சதித்திட்டம் தீட்டியுள்ளனர் என பாக்.புலனாய்வுத்துறையினர் மூலம் தெரியவந்துள்ளது என்று பாக். பிரதமர் ஜபருல்லா ஜமாலி புதனன்று தெரிவித்திருந்தார். இந்நிலையில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.இது பாகிஸ்தானில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (8)

## TR TECH நிறுவன அனுசரணையுடன் கிளிநொச்சி தொழில்நுட்ப கல்வி நிறுவனம் நடத்தும் AAT கற்கை நெறி விரிவுரையாளர்களிற்கான விண்ணப்பம் கோரல்

தேசிய ரீதியில் அங்கீகாரமுடைய சான்றிதழ்களுடனான AAT கற்கை நெறிக்கு விரிவுரையாற்றுவதற்கு தகைமை யுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- தகைமையுடையவர்கள் எதிர்வரும் 30.05.2004 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.
- சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

அதிபர்,
தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்,
கிளிநொச்சி.

(31790)(18,17)

---

## மறக்கமுடியாத நினைவுகளில்

## ஆறாம்மாத அஞ்சலி



| இன்பமாக | துன்பமாக |
|---|---|
| 14 - 05 - 1945 | 10 - 11 - 2003 |

### அமரர் இராமநாதன் ஜெயசிங்கம்

(Attorney at Law, Notary Public, Commissioner for Oaths, Inquirer of Sudden death, J.P. UM)

*"நீதிமானின் ஆன்மா கடவுளின் கையில் உள்ளது அவர் நம்மைவிட்டுப் பிரிந்து சென்றது பேரழிவாகக் கருதப்பட்டது."* *(சாலமோன்3:3)*

ஆறுதிங்கள் மறைந்து போனாலும்
அழுதகுரல் ஓயவில்லை
தனிமையில் நிதமும் வாடுகிறோம்
தேறுதல் சொல்ல இறைவனே வந்தாலும்
தேறிடுமோ எமதுள்ளம்
தெரியாதோ இது உமக்கு?
ஆறுதலாய் சொர்க்கத்தில் அமைதிகாண
ஆண்டவனை நிதமும் இறைஞ்சுகிறோம்.

*36,அன்னம்மாள் வீதி,*
*சுண்டிக்குளி,*
*யாழ்ப்பாணம்.*

(31779)(18,17)

மனைவி,பிள்ளைகள், மருமகள்.

---

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 05 - 11 - 1978 | 10 - 05 - 2000 |

### சோதிலிங்கம் யாதவன்

(கப்டன் வீரமணி)

குடும்பத்தின் மலர்ந்த முதல் மலரே!
குடும்பத்திற்காய் தோள் கொடுப்பாய் என்றிருக்க
மண்ணின் விடிவிற்காய் மாவீரனாகி
நான்காண்டு சென்றதையா!
கல்லறைக்குள் இருக்கும் கண்மணியே!
ஆண்டாண்டு சென்றாலும்
ஆறாது உன்நினைவு!
அனல் கொதிக்கும் மனதுடன்
கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகிறோம்
உன்பாதத்தில
*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.*

*அ.சோதிலிங்கம்,*
*ஏழாலை மேற்கு,*
*ஏழாலை.*

(31786)(18,17)

அம்மா, அப்பா,
தம்பி, தங்கைமார்.

---

# தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வெற்றிடம்

தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

பணிநிலை : அலுவலர் (பயிலுநர்)

தகைமைகள் : ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் ஏற்றுக் கொள்ளக்கூடிய பட்டதாரியாக இருத்தல்வேண்டும்.
அல்லது
ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றில் உயர்தேசியக் கணக்கியல் டிப்ளோமா சான்றிதழைப் (HNDA) பெற்றிருத்தல் வேண்டும்.

மாதாந்த ஊதிய அளவுத்திட்டம் : 4,500 + 6,000


அகவை எல்லை: 32 வருடங்களுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.

வேண்டுகைகள் யாவும் உரிய படிவத்தில் நிறைவுசெய்யப்பட்டுக் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் *"ஆட்சேர்ப்புக்கான வேண்டுகை-அலுவலர் (பயிலுநர்)"* எனக் குறிப்பிடப்பட்டு 2004-05-31 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைத்தல் வேண்டும். வேண்டுகைப் படிவங்களையும் மேலதிக விளக்கங்களையும் தமிழீழ வைப்பகத்தின் எல்லாக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மேலாளர்,
ஆளுகைப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி-34704)(32-21-14)

---







தென்னிந்தியாவில்......10 ஆண்டுகள்!
யாழ்.நகரில்......5 ஆவது ஆண்டில்!
இலங்கை முழுவதும்....2004 முதல்!

செய்மதி தொலைக்காட்சித்துறையில் பலவருட அனுபவம் மிக்க Sats-tech engineers யாழ்.நகரில் 5 ஆவது ஆண்டில் தடம் பதிப்பதை முன்னிட்டு எமது வாடிக்கையாளர்களுக்கு மிகக் குறைந்த விலையில் Dish antenna ரீசீவர் Lnbf மற்றும் நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட கேபிள் T.V. உபகரணங்கள் அனைத்தும் விற்பனைக்குப் பிந்திய சேவையுடன் கிடைக்கும். K.T.V./RAJ T.V./STAR T.V./ DISH T.V. decorder மற்றும் card என்பனவும் பெற்றுக்கொள்ளலாம்.

அதிஉயர் தொழில்நுட்ப முறையில் (Fiber optical) முறையில் உங்கள் Cable T.V. சிஸ்ரத்தை வடிவமைக்க அல்லது மாற்றியமைக்க விரும்புகின்றீர்களா? உடன் தொடர்புகொள்ளவும்.

**SATS-TECH ENGINEERS,**
**No. 182 , K.K.S. ROAD,**
**(Near Kulapity Church)**
**KOKUVIL, JAFFNA.**



Phone :-(021) 2225908
0777 710785

(31747)

---

## நெஞ்சைவிட்டு மறையாத ஒளிவீசும் நினைவலைகள்

### 4 ஆவது ஆண்டு







**மேஜர் காமர் நகுலன்** / **அமரர் ஞா.ரவிவர்மன்**

**ஞா.அருணந்திவர்மன்**

22.12.1977 ← தாயின் மடியில் → 08.06.1981
10.05.2000 ← இறைவன் அடியில் → 19.12.2000

சூரியனின் ஒளி போல எங்கள் வாழ்வுக்கு ஒளி தந்த உங்களைக் கொடிய அரக்கர்கள் அழித்தது ஏனோ?

உங்கள் நினைவால் வாடும்:
*சி. ஞானபாலன் (அப்பா),ஞா. விஜயராணி (அம்மா), த. விஜயமாலா (தங்கை). த. தனராஜ் (மைத்துனன்), த. ஷாஜினி (ஆசைமருமகள்) மற்றும் உற்றார்,உறவினர்கள்.*

மிருசுவில்.

(31650)(18,17)

உதயன்

## தீர்வுக்கான வாய்ப்பு பறிபோகப் போகிறதா?

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான சமாதான முயற்சிகள் ஆக்கபூர்வமான திசையில் முன்நகர வேண்டுமானால் அதற்கான அரசியல் சூழ்நிலையும் பேணப்படவேண்டும்.

முன்னைய ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட சமயம், அதைக் கடுமையாக விமர்சித்து வந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், அவரின் அணியைச் சேர்ந்த அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் போன்றோரும் இப்போது அரசுப் பொறுப்பைத் தாங்கள் ஏற்றுக்கொண்டதும் தங்களின் போக்கை 'U' வடிவில் - தலைகீழாக மாற்றிக்கொண்டு விட்டனர். தங்கள் பாதையை 180 பாகை அவர்கள் திருப்பிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இதே பத்தியில் சுட்டிக்காட்டியிருந்தோம். அவர்களின் இந்த மாற்றம் வரவேற்கத்தக்க போக்கு என்றும் சுட்டியிருந்தோம்.

தமிழர் தரப்பின் ஏகப்பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளை மட்டுமே ஏற்பது, பேச்சுக்களில் அவர்களுக்கு சமபங்கும் சம அந்தஸ்தும் அளிப்பது, புலிகளுடன் மட்டுமே பேசுவது, புலிகள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை குறித்தே முதலில் பேசுவது - என்று பேச்சுக்கான அடிப்படை விடயங்கள் அனைத்திலும் தனது நிலைப்பாட்டை - குத்துக்கரணம் அடித்து - மாற்றிக்கொண்டுள்ளது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு.

இவை வரவேற்கத்தக்க நல்ல அம்சங்கள். ஆனால், இலங்கைப் பக்கத்தில் பேச்சுக்களில் பங்குபற்றும் அரசுத் தரப்பின் பேச்சுத் தொடர்பான கொள்கை அறிவிப்புக்களிலும், நிலைப்பாடுகளிலும் நல்ல மாற்றங்கள் இருப்பதாக வெளியாகும் பிரகடனங்களும், செய்திகளும் மட்டும் சமாதான முயற்சிகள் ஆக்கபூர்வமாக முன்நகர்வதற்கு வழிசெய்து விடா. அதற்கு மேலதிகமாக பேச்சுக்கான உகந்த சூழ்நிலை உருவாக்கப்படுவதும் அவசியம்.

ஆனால், கிழக்கிலங்கையில் - தென்தமிழீழத்தில் - இடம்பெறும் சம்பவங்கள் பேச்சு முயற்சிகளுக்கு வேட்டு வைக்கும் குழப்பச் சூழ்நிலையை ஏற்படுத்தவே வழிசெய்யும். சமாதான முயற்சிகளில் ஈடுபடுவதற்காகத் தனது கொள்கை -நிலைப்பாட்டையே - கடும் வமர்சனத்துக்கு உள்ளாகும் வகையில் - தலைகீழாக மாற்றுவதற்கு இணங்கிவரும் அரசுத் தரப்புக்கு, சமாதான சூழ்நிலையைக் குழப்பும் கிழக்கிலங்கைக் கள நிலைவரம் புரியாமல் போயிருப்பது விந்தை. அது விபரீதமானதும் கூட.

கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இழைக்கப்படும் வன்முறைச் சம்பவங்களில் இராணுவம் தொடர்ந்தும் சம்பந்தப்படுமானால், போர்நிறுத்த உடன்படிக்கையும் சமாதான முயற்சிகளும் முறிந்துபோகக்கூடிய ஆபத்தானநிலை ஏற்படும் என்று எச்சரிக்கும் காட்டமான கடிதம் ஒன்றை புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்றுமுன்தினம் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அனுப்பிவைத்திருந்தார். இதுதான் உண்மையில் யதார்த்த நிலை.

இப்படி ஓர் இக்கட்டான சூழ்நிலை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு தகுந்தமுறையில் அரசுத் தரப்பு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை ஏற்கனவே இப்பகுதியில் பல தடவைகள் வலியுறுத்திச் சுட்டிக்காட்டி வந்துள்ளோம்.

இத்தகைய வன்முறைகள் அரசுத் தலைமையின் ஆசீர்வாதத்துடன் - இராணுவ வழிகாட்டலில் அல்லது பங்களிப்பில் - நடக்கின்றனவா? அல்லது அரசுத் தலைமைக்குக் 'கடுக்காய்' கொடுத்துவிட்டு, படைத்தரப்பு தன் கைவரிசையைக் காட்டுகின்றதா? - இதுவே நடுநிலை நோக்கர்களுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தும் கேள்வி.

எது எப்படியென்றாலும், 1990 இல் ஜனாதிபதி பிரேமதாஸவுடனும், 1995 இல் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடனும் முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகள் அப்போதைய நிலையில் குழம்பிப் போவதற்குக் கிழக்கில் படையினரின் செயற்பாடுகளே முக்கிய காரணம் என்பது இராணுவ நோக்கர்களுக்கு நன்கு தெரிந்தவிடயம்.

அதே சரித்திரம் 2004 இலும் திரும்பப்போகின்றதா? இந்த சமாதான முயற்சிகளும் முளையிலேயே கருகும் சூழ்நிலை உருவாகின்றதா? - என்பதை சமாதான விரும்பிகளின் மனதை நெருடும் சந்தேகங்களாக உள்ளன.

ஜனாதிபதி குமாரதுங்க விரைந்து நடவடிக்கை எடுக்காவிட்டால், நாட்டுக்கு அமைதியையும் சமாதானத் தீர்வையும் ஏற்படுத்திக் கொடுக்க இரண்டாவது தடவையாகவும் தமக்குக் கிடைத்த வாய்ப்பை அவர் கோட்டை விட்டவராவார் என்பது நிச்சயத்திலும் நிச்சயம்!

# பேச்சு மேசையில் அமரவேண்டிய தரப்புகள் புலிகளும் அரசும் மட்டுமே என்பது தெளிவு

### ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அறிக்கை

கொழும்பு,மே10

பேச்சுக்களை நடத்துவது தொடர்பான அரசியல் மற்றும் களநிலைமைகளைக் கவனத்தில் எடுத்துக்கொண்டால், பேச்சுக்களுக்கான மேசையில் அமரவேண்டிய பிரதான தரப்புக்களாக, அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் மட்டுமே இருக்கமுடியும் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

- இவ்வாறு கூறும் அறிக்கையொன்றை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெளியிட்டுள்ளது.

முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான சிசில் பிரேமஜயந்த வெளியிட்டுள்ள மேற்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

திம்புவில் நடைபெற்ற பேச்சுக்களைத்தவிர, இனப்பிரச்சினைத்தீர்வுக்கான மற்ற எல்லாப்பேச்சுக்களும் பதவியிலிருந்த அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலேயே நடைபெற்று வந்துள்ளன. அச்சந்தர்ப்பங்கள் எல்லாவற்றிலும் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மட்டுமே பேச்சுக்களின் பிரதான பங்காளிகளாக இருந்துள்ளனர்.

பிரேமதாஸ ஜனாதிபதியாகவிருந்தபோதும், குமாரதுங்க முதலில் ஜனாதிபதியாக இருந்தபோதும், கடந்த இரண்டு ஆண்டுகளாக ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவிருந்தபோதும் இவ்வாறே நடந்துள்ளது. இந்த வரலாற்று உண்மை விடுதலைப் புலிகளுக்கும் முன்னாள் பிரதம மந்திரிக்குமிடையில் கையெழுத்தாகி நடைமுறையிலுள்ள போர்நிறுத்த உடன்படிக்கையிலும் பிரதிபலிக்கின்றது. அந்தவகையில், அரசியல் மற்றும் கள நிலைமைகளைக் கவனத்தில் எடுக்கும்பொழுது பேச்சு மேசையில் அமரவேண்டிய பிரதான இருதரப்பினரும் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மட்டுமேஎன்பது தெளிவாகின்றது.

இந்த அடிப்படையிலேயே வெளியுறவு அமைச்சர் கதிர்காமர் புலிகளை தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்வதென்ற கருத்தை வெளியிட்டிருந்தார். புலிகளுடன் பேச்சு நடத்துவதை வேறு எந்தத் தமிழ்க்கட்சியும் எதிர்க்கவில்லை. தமிழ்க் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் சட்டப்படி தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்களா என்பது வேறு விடயம். இந்த விடயம் இப்பொழுது நீதிமன்றத்தில் உள்ளது.

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பேச்சுக்களில் ஈடுபடுவதானது, இன்றைய அரசு இனப்பிரச்சினையில் விரிவான ஒரு தீர்மானத்தை எடுப்பதற்காக சம்பந்தப்பட்ட எல்லாத்தரப்பினர்களோடும் விரிவான பேச்சுக்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

- இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ப)

# தேர்தல்களில் அடையாள அட்டையை கட்டாயமாக்குவது குறித்துப் பரிசீலனை

கொழும்பு,மே10

தேர்தல்களின்போது தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிக்கவேண்டும் என்பதைக் கட்டாயமாக்கும் விதத்தில் சட்ட மூலம் ஒன்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவிருக்கிறது.

இத்தகவலை அமைச்சர் தினேஷ் குணவர்த்தன பத்திரிகைகளுக்கு வெளியிட்டுள்ளார்.

தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பாக ஆராய்ந்து சிபாரிசுகள் செய்வதற்காக நியமிக்கப்பட்டிருந்த நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் தலைவராக அமைச்சர் தினேஷ் குணவர்த்தன இருந்தார் என்பது தெரிந்ததே.

அக்குழு நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னர் தயாரித்த இடைக்கால அறிக்கையில் சில சீர்திருத்தங்களைத் தெரிவித்திருந்தது. அந்தச் சீர்திருத்தங்களில் மூன்றை அமுல்படுத்துவது குறித்து இப்பொழுது அரசு தீவிரமாக ஆராய்ந்து வருவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

★ தேர்தல்களின்போது தேசிய அடையாள அட்டையை வாக்காளர்கள் சமர்ப்பிக்கவேண்டும்.

★ வாக்களிப்பதற்கு மின்சார இயந்திரங்களைப் பயன்படுத்துதல்.

★ அதிகவாக்குகளைப் பெறும் வேட்பாளர் வெற்றிபெற்றார் என்று அறிவிக்கும் முறையையும் இணைத்து ஜேர்மன் பாணியிலான தேர்தல் முறையை அறிமுகப்படுத்துவது.

இம்மூன்றுமே இப்பொழுது சட்டமூலங்களாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டுவருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

மின் இயந்திரங்கள் மூலம் வாக்களிக்கும் முறை அறிமுகமானால் முறைகேடுகள் இடம்பெறாது என்றும் வாக்களிப்பு துல்லியமாக இருக்கும் என்றும் அமைச்சர் கூறினார்.

முதல் இரண்டு ஆலோசனைகளும் சபையில் இலகுவில் நிறைவேற்றப்பட்டுவிடும். ஆனால், ஜேர்மன் பாணி அரசியல் திட்டம் ஒன்றைக்கொண்டுவருவது பற்றிய நகல் திட்டம் இன்னமும் தயாரிக்கப்படவில்லையென்று அவர் மேலும் கூறினார்.

மேலும் தேர்தல் முறையில் மாற்றங்கள் செய்வதானால் புதிய தெரிவுக்குழு ஒன்று நியமிக்கப்படுவது அவசியமாகலாம் என்று அமைச்சர் குறிப்பிட்டார். (ப)

## ஜனாதிபதி, பிரதமர் இருவரும் முரளிக்குப் பாராட்டுச் செய்திகள்

கொழும்பு,மே10

டெஸ்ட் கிரிக்கெட்டில் உலக சாதனை படைத்துள்ள முதையா முரளிதரனுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் பிரதம மந்திரி மகிந்த ராஜபக்ஷவும் பாராட்டுச் செய்திகள் அனுப்பியுள்ளனர்.

ஜனாதிபதி அனுப்பியுள்ள தமது செய்தியில் டெஸ்ட் வரலாற்றில் உலக சாதனை படைத்துள்ள முதலாவது இலங்கையராகிய உங்களை வாழ்த்துகின்ற ஆயிரக்கணக்கான இலங்கையர்களுள் நானும் சேர்ந்து கொள்கின்றேன். சவால்களையும், சோதனைகளையும் நீங்கள் துணிவோடும் உறுதியோடும் எதிர்கொண்ட விதம் பாராட்டுக்குரியது. தொடர்ந்தும் வெற்றிகளைக் குவிக்கவேண்டுமென வாழ்த்துகின்றேன் என குறிப்பிட்டுள்ளார்.

கிரிக்கெட் உலகில் சாதனை புரிந்து நாட்டுக்கு மதிப்பினை உருவாக்கியுள்ள உங்களை நாடும் நானும் அரசாங்கமும் பாராட்டுகின்றோம் என்று பிரதமர் தமது செய்தியில் கூறியுள்ளார். (ப)

## கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் யாழ். மாவட்டத்திலேயே அதிகம்

யாழ்ப்பாணம்,மே10

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் யாழ். மாவட்டத்திலே அதிக எண்ணிக்கையான பல நோக்குக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்று மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

யாழ். மாவட்டத்தில் 24 ப.நோ.கூ.சங்கங்கள் உள்ளன. அவற்றில் 2 லட்சத்து 44 ஆயிரத்து 517 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். இவற்றில் ஒரு லட்சத்து 83 ஆயிரத்து 759 உறுப்பினர்கள் பெண்களாவர். மிகுதி 60,758 பேர் ஆண்களாவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள 24 பல நோக்குக் கூ.சங்கங்களுக்கு 509 கிளைகள் உள்ளன. 39 மொத்த விற்பனை நிலையங்களும் 123 சாதாரண விற்பனை நிலையங்களும் உள்ளன.

மேலும் இங்கு 13 மாதிரிக் கடைகளும் 17 ஆடையகங்களும் இயங்கி வருகின்றன. அதேவேளை, ப.நோ.கூ.சங்கங்களின் கீழ் 31 கிராமிய வங்கிகள் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது.

வடக்கு - கிழக்கைப் பொறுத்தவரை யாழ். மாவட்டத்தில் 24 சங்கங்களும் கிளிநொச்சி, அம்பாறை, முல்லைத்தீவு மாவட்டங்களில் தலா 6 சங்கங்களும், வவுனியா மாவட்டத்தில் 4சங்கங்களும், மன்னார் மாவட்டத்தில் 7 சங்கங்களும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 16 சங்கங்களும் கல்முனையில் 12 சங்கங்களும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-7)

**நாளை**

சித்திரை 29
செவ்வாய்க்கிழமை
(11.05.2004)
திதி : அட்டமி
பகல் 10.45 வரை.
நட்சத்திரம்: திருவோணம்
பகல் 10.45 வரை.
சுபநேரம்: 10.24 - 11.54
ராகுகாலம்: 2.54 - 4.24
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

கல்வி கற்றாலும் அதிலிருந்து அறிந்துகொண்ட அறிவுக்குமேல் இன்னும் அறிய வேண்டிய அறிவு இருந்து கொண்டே இருக்கிறது.

## 'நிக்கொட்' நிதி உதவியுடன் மாணவர் விடுதிக் கட்டடம்

### யாழ்.மத்திய கல்லூரியில்

யாழ்ப்பாணம்,மே10

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் 'நிக்கொட்' நிறுவனத்தினால் யாழ்.மத்திய கல்லூரியில் மாணவர் விடுதி ஒன்று அமைக்கப்படவுள்ளது.

யாழ்.மத்திய கல்லூரியின் அதிபர் கே.இராசதுரை இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

தேசிய பாடசாலைகளில் மாணவர் விடுதி அமைக்கும் செயற்றிட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் 'நிக்கொட்' நிறுவனம் இந்த விடுதியை நிறுவவுள்ளது.

சுமார் நூறுபேர் தங்கக்கூடிய வசதிகளைக் கொண்ட இரண்டுமாடிக் கட்டடம் மற்றும் உணவு மண்டபம், சமையல் அறைக்கூடம் என்பன விடுதியில் அடங்கும்.

இவ்வருட இறுதிக்குள் விடுதி அமைக்கும் பணி பூர்த்திசெய்யப்படவுள்ளது என்று - கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

முன்னர் இக் கல்லூரியில் இருந்த மாணவர் விடுதி கடந்த கால யுத்த நடவடிக்கையின்போது முற்றாகச் சேதமடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

(ஐ-7)

## பலாலி விமான நிலையத்தைச் சீர்திருத்த இந்தியா நிபந்தனை?

கொழும்பு,மே10

பலாலி விமானத்தளத்தைத் திருத்தி சீர் அமைத்துத்தருவதற்கு இந்தியா முன்வந்திருப்பதாக மீண்டும் தகவல் வெளியாகி இருக்கின்றது.

நானூறு கோடி இந்திய ரூபா செலவில் இந்தப் பணிகளை முடித்துத் தருவதற்கு இணங்கியுள்ள இந்திய அரசாங்கம், இலங்கை விமானப்படையைத் தவிர வேறு எந்த அரசோ, விமான நிறுவனமோ இந்த விமானத்தளத்தை உபயோகிக்கக் கூடாதென நிபந்தனை விதித்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

முன்னைய ஐ.தே.கட்சி அரசாங்கம் பதவியிலிருந்த காலத்திலேயே இந்த யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தபோதிலும் இந்தியாவின் நிபந்தனை காரணமாக அது முன்னெடுக்கப்படவில்லையென்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் புதுடில்லிக்குப் போயிருந்த சமயம் மீண்டும் இந்த யோசனை பரிசீலனைக்கு வந்ததாக அறியப்படுகின்றது.

விமான நிலையத்தின் மீதான இலங்கையின் இறைமையை இந்தியா மறுக்காது போனாலும் ஏதோ ஒருவகையில் அதன் மீது தனக்கு கட்டுப்பாடு இருக்கவேண்டும் எனக் கருதுவதாகத் தெரிகின்றது. இந்த விமான நிலையத்தை எதிர்காலத்தில் வேறு நாடுகளின் பயன்பாட்டுக்கு அரசாங்கம் விட்டுக்கொடுக்கக்கூடும் என்று இந்தியா அஞ்சுவதாகத் தெரிகின்றது.

இப்போதைக்கு இந்த யோசனை மீண்டும் கிடப்பில் உள்ளது. (ப)



வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலய வருடாந்தப்

# பொங்கல் உற்சவம்

31.05.2004

மேற்படி பொங்கல் உற்சவம் வழமைபோல எதிர்வரும் 31.05.2004 திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. முல்லைத்தீவு அரச அதிபர் தலைமையில் 29.4.2004 ஆம் திகதி திணைக்களத் தலைவர்களும் ஆலய பரிபாலன சபையினரும் கலந்துகொண்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

1. 30.05.2004, 31.05.2004 ஞாயிறு, திங்கள் ஆகிய இரு தினங்களும் முகமாலை, ஓமந்தை ஆகிய இரு தடைமுகாம்களும் அடியார்களின் வசதிக்காக 24 மணி நேரமும் திறப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன - என்பதையும்
2. விழாக்கால வர்த்தக நிலையங்களுக்கான பதிவுகளை 19.05.2004 தொடக்கம் 26.05.2004 வரை செய்துகொள்ளலாம் - என்பதையும்
3. 27.05.2004 வியாழக்கிழமை வர்த்தக நிலையங்கள் பகிர்ந்தளிக்கப்படும் - என்பதையும் தெரியப்படுத்துகின்றோம்.

- ஆலய பரிபாலன சபை.

(31739)(38-16-18-24)

# தொழில்சார் வெற்றிடங்கள்

கிளிநொச்சியில் இயங்குகின்ற பதிவுசெய்யப்பட்ட பிரபல தனியார் நிறுவனம், சர்வதேச நிறுவனம் ஒன்றுடன் இணைந்து வடகிழக்கு மாகாணங்களில் வீதி அபிவிருத்தி வேலைகள், கட்டட நிர்மாண வேலைகள் போன்றவற்றை நடைமுறைப் படுத்தவுள்ளது. எனவே, கீழ்வரும் பதவிகளுக்குத் தகுதிவாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## தகைமைகள்

1. தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் - வெற்றிடங்கள் 10 (02 வருட ஒப்பந்தம்)
   அ) NDT அல்லது இதற்குச் சமனான வேறு தகைமைகள்
   ஆ) 15வருட அனுபவம் (இதில் 05வருடம் வீதி வேலைகள்/பாலங்கள் நிர்மாணித்தலில் அனுபவம்)
2. நிலஅளவையாளர்கள் - வெற்றிடங்கள் 05 (06மாத ஒப்பந்தம்)
   அ) 10 வருட அனுபவம் - வீதி அமைப்பு (Topographic Survey)
3. ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் - வெற்றிடங்கள் 10 (02வருட ஒப்பந்தம் (Laboratory Technicians)
   அ) NDT அல்லது இதற்குச் சமனான வேறு தகைமைகள்
   ஆ) 05 வருட அனுபவம் (மண்ஆராய்ச்சி, தார், சீமெந்துப் பகுப்பாய்வு)
4. பொறியியலாளர்கள் (Civil) - வெற்றிடங்கள் 05 (02 வருட ஒப்பந்தம்)
   அ) B.Sc. (Engineer) Civil
   ஆ) பட்டையப் பொறியியலாளர்
   இ) 8வருட அனுபவம் (இதில் 05 வருடங்கள் வீதி, கட்டடம், பாலம் அமைத்தல்)

மேலே குறிப்பிட்ட வெற்றிடப் பதவிகளுக்கு வயதெல்லை பார்க்கப்படமாட்டாது. இப்பதவிகளுக்கான மாதாந்த வேதனம் இரு சாராரும் கலந்தாலோசித்துக் கவர்ச்சிகரமான முறையில் நிர்ணயிக்கப்படும்.

விண்ணப்பங்களுடன் தங்கள் சுயவிபரக்கொத்தையும் இணைத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி: 28-05-2004

விளம்பர இல.2260,
மே/பா, உதயன், யாழ்ப்பாணம்.

(சி-34768) (26-16-18-24)

# 16ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 09 - 11 - 1920



ஆண்டவன் அடியில் 09 - 05 - 1988

அமரர் **நாகலிங்கம் பாலகிருஷ்ணர்**

*(பத்தர்)*

திதி: 10-05-2004

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

ஐயா! எங்களின் இதயத் தெய்வமே!
உங்களின் உயர்ந்த இலட்சியங்களை
எங்களது நெஞ்சினிலே சுமந்து
நீங்கள் காட்டிய சத்தியப் பாதையிலே
நாங்கள் உறுதியுடன் செல்லுவோம்!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*பூநாறி ஒழுங்கை,*
*கொக்குவில் மேற்கு.*
*(மணியகாரன் வீதி, தெல்லிப்பழை).*

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(31783) (24-16-18)

## பஸ் சேவையை விஸ்தரிக்கக் கோரிக்கை

வட்டுக்கோட்டை,மே10

மாணவர்களின் நன்மைகருதி 786ஆம் இலக்க பஸ் சேவையை யாழ்ப்பாணக் கல்லூரிவரை நடத்துமாறு வட பிராந்திய போக்குவரத்துச் சபையிடம் வட்டு. மூளாய் வீதி ஐக்கிய நாணய சபை கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த பஸ்ஸில் கொக்குவில், ஆனைக்கோட்டை, நவாலி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் பயணஞ்செய்வதால் அவர்களின் நன்மைகருதியே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ-161)

## கடைக்குள் புகுந்த நாய் இருவரைக் கடித்தது

வலி. கிழக்கு,மே10

சிகை அலங்கரிப்பு நிலையத்தினுள் புகுந்த நாய் அங்கிருந்த இருவரைக் கடித்துக் காயப்படுத்தியது.

இச்சம்பவம் கல்வியங்காடுப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கல்வியங்காடு, மூன்றாம் கட்டைப் பகுதியில் உள்ள சிகை அலங்கரிப்பு நிலையம் ஒன்றினுள்ளேயே நாய் திடீரெனப் புகுந்தது.

அங்கு தலைமுடி வெட்டிக்கொண்டிருந்தவரையும் முடி வெட்டுவதற்காக வந்திருந்தவரையும் கடித்துப் படுகாயப்படுத்திவிட்டுத் தப்பி ஓடிவிட்டது. கல்வியங்காட்டுப் பகுதியில் கட்டாக்காலியாகத் திரியும் நாய்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகப் பொதுமக்கள் கூறுகின்றனர்.(ஐ-180)

## மழையால் மட்டுவில் கத்தரிப்பயிருக்கு பெரும் பாதிப்பு

சாவகச்சேரி,மே10

கடந்தவாரம் தொடர்ச்சியாகப் பெய்த பெருமழையால் மட்டுவில் பகுதியில் வயல் நிலங்களில் விவசாயிகளால் பயிரிடப்பட்டிருந்த 'மட்டுவில் கத்தரி' பயிர்களுக்குப் பலத்த பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

வயல்களில் மழை வெள்ளம் தேங்கியுள்ளதால் கத்தரிச் செடிகள் அழிவடையும் நிலையிலுள்ளன என்று விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (ஐ-31)

## யாழ். மாநகர சபை பிரதேசத்தில் நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பணம்,மே10

மாநகரசபை எல்லைக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய்க்கான தடுப்பூசி 3ஆம் கட்டமாக வழங்கப்பட இருக்கின்றன.

வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி நாளை 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நல்லூர் சிகிச்சை நிலையம் (8.30மணி) மூத்தவிநாயகர் ச.ச.நி. (11.00மணி) சங்கிலியன் பொதுப்பணி மன்றம்(12.00மணி) ஆகிய இடங்களிலும் -

12ஆம் திகதி கொண்டலடி ச.ச.நி. (8.30 மணி) வள்ளுவர் ச.ச.நி (11 மணி) காமாட்சி ச.ச.நி. (2 மணி) ஆகிய இடங்களிலும் -

13ஆம் திகதி ஆத்திசூடி ச.ச.நி. (8.30 மணி) நீராவியடி ச.ச.நி. (11 மணி) வேம்படி ச.ச.நி. (2.00 மணி) ஆகிய இடங்களிலும் -

18ஆம் திகதி கலைவாணி ச.ச.நி. (8.30 மணி) ஒஸ்மானியாக் கல்லூரிக்கு அருகில் (11 மணி) ஆகிய இடங்களிலும் வழங்கப்படும் என சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.(ஐ-ரி)

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்,
வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி,
தலைகால் அவியல்,
சருமநோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல்,
மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபல்யமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்:

வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண் : 222 2459

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது அஞ்சலக ஊழியரான
திருவாளர்
**கிருஷ்ணர் மயில்வாகனம்**

அவர்கள் 07.05.2004 அன்று அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணஞ்செய்து கொண்டார். அதனையிட்டு அவரைப் பாராட்டி நாம் மகிழ்ச்சியடைவதோடு, அவரின் சமூகப்பணி மேலும் தொடர நாம் வாழ்த்துகின்றோம்.

அஞ்சல் அலுவலகத்தினர்,
வட்டுக்கோட்டை.

(சி-34780) (26-16-18-24)

# அறிவித்தல்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்,
பொன்னம்பலம்பிள்ளை சிற்றம்பலம்
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.
மனுதார்

வழக்கு இல. : 7187
நம்பிக்கைச் சொத்து

மேலே பெயர் குறித்த மனுதார் மீசாலை வடக்கு, வெட்டுக்குளம் வீரகத்திப்பிள்ளையார் கோவிலுக்கு தர்மகர்த்தா என்ற கோதாவில் குறித்த கோவிலுக்குச் சொந்தமானதும் இதன்பின் ஆதன இடாப்பில் நன்கு விவரிக்கப்படுவதுமான ஆதனத்தை ரூபா 1,034,38.99 சதத்துக்கு மீசாலை வடக்கைச் சேர்ந்த சின்னவன் இராசரத்தினத்துக்கு விற்று, அப்பணத்தைக் கோயிலைப் புனரமைத்துத் திருப்பணி வேலைகளைச் செய்து கும்பாபிஷேகம் செய்யவென அதற்கான அனுமதிகோரி இம்மன்றில் இவ்வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். குறித்த விண்ணப்பத்துக்கு ஆட்சேபனை உடைய ஆள் எவரும் 2004 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பதாக தாம் நேர்முகதாகவோ அல்லது சட்டத்தரணி மூலமாகவோ தோற்றி தமது ஆட்சேபனையைக் கோப்பிடுமாறும் தவறின் மனுதாரரின் விண்ணப்பம் இம்மன்றினால் பரிசீலனை செய்யப்பட்டுத் தீர்மானிக்கப்படுமெனவும் இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

மன்றின் கட்டளைப்படி
பதிவாளர்
V. நடராஜா
பதிவாளர் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

ஆதன இடாப்பு

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப் பகுதி மீசாலை வடக்கு இறை "கட்டைப்பறித்தான்" நில.பர. 6,5/8 உத்தரவுபெற்ற நில அளவையாளர் வ.சிவராசா அவர்களால் 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி சித்திரிக்கப்பட்ட 2123 ஆம் நில அளவைப் படத்தில் 1 ஆம் துண்டாகக் காட்டியுள்ளது. இதன் விசாலம் நில.பர 7 குழி 11.41 ஏழு குழி பதினொன்று தசம் நாலு ஒன்று இதற்கெல்லை கிழக்கு கனகு தங்கவேலுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கும் மேற்கும் ஒழுங்கை, தெற்கு கந்தன் கணபதிக்குரிய ஆதனம். இதடங்கலும் 2004 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி


வரைபு

மனுதாரரின் சட்டத்தரணி
செ.பாலகிருஷ்ணன.

V.நடராஜா
பதிவாளர்,
சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்.

(31775)(34-16-18-24)

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



அமரர் **இராசையா சதீஸ்குமார்**

திதி: ஷஷ்டி 10.05.2004

தோற்றம் 28-10-1969

மறைவு 21-04-2003

பாசமுள்ள மகன் சதீஸ்குமார்
எங்களை ஆறாத்துயரில் விட்டுச் சென்றாயோ?
உனது துன்பம் தான் எங்களது துன்பமும்
உனது ஆத்மா மோட்ஷ சாந்தியடைக!

"ஓம் பூர் புவ சுவஹ, தத் சவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி, தியோ யோத ப்ரசோத யாத்"
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*கற்பகட்பிள்ளையார் வீதி,*
*உரும்பிராய் வடக்கு.*

**V.இராசையா**
**குடும்பம்.**

(31767) (24-16-18)

# வடமராட்சியின் முக்கிய இரு வாயில்கள் மூடப்படும் அபாயம்!

வடமராட்சியின் நுழைவாயில்களில் முக்கிய இரு வாயில்கள் இன்று படுமோசமான நிலையில் சேதமடைந்துள்ளன. அவை வல்லை வெளியிலுள்ள வல்லைப் பாலமும், தொண்டைமானாறு செல்வச்சந்நிதியின் வடமேற்குத் திசையிலுள்ள தொண்டைமானாற்றுப்பாலமும் தான்.

யாழ்ப்பாணம், அச்சுவேலி, வலிகாமம் போன்ற பிரிவுகளில் இருந்து வடமராட்சியினுள் நுழையும் வாயிலாக வல்லைவெளிப் பாலம் அமைந்துள்ளது.

இந்தப்பாலம் 18ஆம் நுற்றாண்டில் போர்த்துக்கேயர் காலத்தில் சுனணாம்புக் கற்களால் கட்டப்பட்டதாகும்

இப்பாலம் 250 மீற்றர் நீளமும் 16 அடி அகலமும் கொண்டதாகும். இந்தப் பாலத்தினூடாக ஒரேநேரத்தில் இரு பெரிய வாகனங்கள் பக்கம் பக்கமாக விலகிச் செல்லக்கூடியவாறு அமைக்கப்பட்டுள்ளது.

1993ஆம் ஆண்டுக்கும் 1997ஆம் ஆண்டுக்கும் இடையில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் ஷெல்தாக்குதல், விமானத்தாக்குதல் காரணமாக ஏற்கனவே சேதமடைந்திருந்த வல்லைப்பாலத்தின் மேற்குப்புறமாக உள்ள சுவருடன் கூடிய ஒரு பகுதி இடிந்து ஆற்றுக்குள் விழுந்துவிட்டது.

பின்னர் 1995ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளால் பனைமரக்குற்றிகள் போட்டு புனரமைக்கப்பட்டு அன்று தொட்டு இன்று வரை எவ்வித சேதமும் இன்றி புனரமைக்கப்பட்ட பாலத்தினூடாக மக்கள் பயணம் செய்து வந்தனர்.

ஆனால், இன்று பாலத்தின் கிழக்குப் புறம் உடைந்து விழுந்துள்ளதுடன், பாலத்தின் மேற்குப்புறமாக உள்ள மதில் இரு இடங்களில் பெரிய துவாரங்களும், வெடிப்பும் ஏற்பட்டுள்ளன. இதன் காரணமாக அண்மைக்காலமாக அவ்வீதியூடான போக்குவரத்தில் பெரும் சிக்கல்களும் நெருக்கடிகளும் ஏற்பட்டுள்ளன. இந்தப் பாலத்தின் கிழக்குப் பகுதியில் இராணுவத்தினரின் காப்பரண்களும் மேற்குப்பகுதியில் ஒரு காப்பரணும் அமைந்துள்ளன.

மேலும் இப்பாலம் அச்சுவேலிப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எனினும், இதுவரை மேற்படி பிரதேசசபை இது விடயத்தில் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

வீதி அபிவிருத்திப் பணியில் ஈடுபடுபவர்களும் பாலத்தில் எவ்வித புனரமைப்பையோ பாதுகாப்பு நடவடிக்கைகளையோ மேற்கொள்ளவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

எது எப்படி இருப்பினும், பெய்துவரும் அடைமழை காரணமாக ஏற்கனவே சேதமடைந்த நிலையில் பாலம் இருப்பதாலும் இது மக்கள் போக்குவரத்திற்குப் பயன்படாமல் துண்டிக்கப்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.



வல்லைப்பாலத்தின் மேல் அமைந்துள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் காப்பரண்கள்.



தொண்டைமானாற்றுப்பாலம்.



வல்லைப்பாலம் கிழக்குப் பக்கமாக உள்ள சேதமான பகுதி (பாலம்) உடைந்து நீர் தெரிகிறது. பாதுகாப்பிற்காகத் தகரம் போடப்பட்டுள்ளது.

## தொண்டைமானாற்றுப்பாலம்

இதுவும் கிட்டத்தட்ட போர்த்துக்கேயர் காலத்தில் அமைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டபோதும், இந்தியாவின் மன்னர்களில் ஒருவனான தொண்டைமானாலேயே அமைக்கப்பட்டதாகச் சிலர் கூறுகின்றனர்.

இப்பாலம் அமைக்கப்பட்டதன் காரணம் வல்லை வெளியூடாகக் கால்வாய் வெட்டப்பட்டு கரணவாய்ப் பகுதி கடல் நீரைப் பாய்ச்சி உப்பு விளைவிப்பதற்காகவே. அப்பாலம் பெரிய கடற்கரை என்னும் பகுதியில் அமைக்கப்பட்டது. அது காலம் பல கடந்து சேதமடையவே தற்போது உள்ள பாலம் ஸ்ரீலங்கா அரசால் வெளிநாட்டு உதவி பெற்று புதிதாக அமைககப்பட்டது.

இது 1993ஆம் ஆண்டு யுத்த அனர்த்தங்களின போது கிளைமோர் குண்டுத் தாக்குதலில் தகர்க்கப்பட்டது. பின்பு 1994ஆம் ஆண்டு இராணுவத்தினரின் வாகனப் போக்குவரத்திற்காக இராணுவத்தினரால் தற்காலிகமாக தொங்கு பால அமைப்பில் புனரமைக்கப பட்டது. எனினும், 1996ஆம் ஆண்டு மீண்டும் கிளைமோர் தாக்குதலால் முற்றாகத் தகர்க கப்பட்டது.

இப் பாலத்தினூடாக கீரிமலை, காங்கேசன்துறை, மயிலிட்டி, பலாலி, இடைக்காடு, அச்சுவேலி போன்ற இடங்களுக்கு மக்கள் போக்குவரத்துச் செய்கின்றனர்.

மேற்படி பாலத்தின் தூரமும் குறுகிய அளவாகும். இப்பாலம் சேதமாக்கப்பட்டதால் செல்வசந்நிதிக்கு வரும் மக்கள் பெரும் சிரமங்களுடன் பலதூரம் கடந்து வல்லைவெளியூடாகவே தமது பயணங்களை மேற்கொள்ளவேண்டியுள்ளது.



விடுதலைப் புலிகளால் புனரமைக்கப்பட்ட பனைக்குற்றிகளாலான பாலம்.

மேற்படி இரு பாலங்களையும் மக்கள் போக்குவரத்திற்கு ஏற்றவாறு உடனடியாகப் புனரமைக்க வேண்டிய தேவை இப்போது ஏற்பட்டுள்ளது. எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இது விடயத்தில உடனடியாக அக்கறை கொண்டு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனப் பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

செய்திக் கட்டுரை
சி.சுந்தரலிங்கம்
கரவெட்டிச் செய்தியாளர்

# ஐ.தே.கட்சியில் முக்கிய மாற்றங்கள்; விவரம் இன்று அறிவிக்கப்படலாம்

கொழும்பு,மே10

நடந்து முடிந்த தேர்தலில் ஏற்பட்ட தோல்வியைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. புதிய மாற்றங்கள் தொடர்பாகவும் மற்றும் புதிய பதவிகளில் நியமிக்கப்பட்டவர்களின் பெயர் விவரங்களையும் அக்கட்சி இன்று திங்கட்கிழமை வெளியிடும் என்று எதிர்பார்க கப்படுகின்றது.

அக்கட்சிக்குப் புதிய தவிசாளர், செயலாளர் மற்றும் தேசிய அமைப்பாளரும் நியமிக்கபபடக்கூடும். கட்சியின் பலவீனங்களை ஆராயந்த பின்னர் அதனைப் புதிதாக மாற்றியமைக்க வேண்டுமென்று சமீபத்தில் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியிருந்தார்கள்.

இதேவேளை -

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பீடம் கட்சியின் தவிசாளராக மலிக் சமரவிக்கிரமவை தொடர்ந்தும் வைத்திருக்கத் தீர்மானித்துள்ளது என்று ஒரு செய்தி தெரிவித்தது.

மலிக் சமரவிக்கிரமவை தவிசாளர் பதவியில் இருந்து நீக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது.

இதேவேளை -

கடந்த பொதுத் தேர்தலின் போது விவசாயப் பிரதேசங்களில் ஐக்கிய தேசியக் கட்சி பின்னடைவுகளை எதிர்நோக்கியதற்கான காரணங்களையும் கட்சியின் தலைமைப்பீடம் ஆராயவுள்ளது எனத் தெரியவருகிறது.

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னதாக கட்சியைப் புனரமைத்து மேலும் பலப்படுத்துவது எனத் தலைமைப்பீடம் தீர்மானித்துள்ளது. (ஐ-ரி-6)

# முன்பள்ளி சிறார்களுக்கு பாடசாலை உபகரணங்கள்
## எழுச்சிப் பேரவையினர் வழங்கினர்

வலி.வடக்கு,மே10

கோண்டாவில் வடக்கு பகவான் கிராம முன்பள்ளி சிறார்களுக்கான பாடசாலை உபகரணங்களை யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவையினர் வழங்கியுள்ளனர்.

யாழ் மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் பிரபா தலைமையில் ஞான ஒளி சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற வைபவத்தின் போது இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன், தொழிற்சங்கப் பொறுப்பாளர் இமையவன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-86)

# நிதிப் பயன்பாடு தொடர்பாக பிரதேச செயலருக்கு முறைப்பாடு

தெல்லிப்பழை, மே10

இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தினால் வழங்கபபட்ட நிதி தகுந்தமுறையில் பயன்படுத்தப்படுவதில்லையென பொது மக்களால் வலி.தெற்குப் பிரதேச செயலருக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பாக ஆராய்வதற்காக மேற்படி சங்க நிர்வாகிகளுடன் பிரதேச செயலர் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார். இணுவில கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்க வளர்ச்சிக்காகவும் அச்சங்கத்தினூடாக கிராம மக்களுக்கு சுழற்சி முறையிலான கடன்களை வழங்கவும் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் 98ஆம் ஆண்டு ஐந்து லட்சம் ரூபாவை மேற்படி சங்கத்திற்கு வழங்கியிருந்தது. எனினும், இந்நிதியைப் பயன்படுத்தி 98ஆம் ஆண்டு மட்டுமே பொதுமக்களுக்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன எனவும் - அதன் பின் இந்நிதி உரிய முறையில் பயன்படுத்தப்படவில்லை என்றும் -

பொதுமக்கள் தரப்பிலிருந்து பல முறைப்பாடுகள் பிரதேச செயலருக்குக் கிடைத்திருந்தன.

இது தொடர்பாக ஆராயவே கடந்த வாரம் சங்க நிர்வாகிகளுடன் பிரதேச செயலர் கலந்துரையாடலை நடத்தினார்.

மேற்படி நிதி தொடர்பான சரியான கணக்கறிக்கைகளை அடுத்த நான்கு மாதங்களுக்குள் சமர்ப்பிப்பதென இணக்கம் காணப்பட்டிருப்பதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-150)

## யாழ். மத்திய கல்லூரிக்கு கணனி நிலையம்

யாழ்ப்பாணம்,மே10

யாழ் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் லண்டன் கிளையால் அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய கணனி நிலையம் ஒன்று யாழ். மத்தியகல்லூரியில் வெகு விரைவில் திறந்துவைக்கப்படவுள்ளது.

இதன் ஆரம்ப நடவடிக்கையாக சுமார் 3 லட்சம் ரூபா பெறுமதியான 'கையடக்கக் கணனி' மற்றும் 'பல்லூடக ஒளிதரு கருவி' என்பன கல்லூரி அதிபரிடம் அண்மையில் ஒப்படைக்கப்பட்டன. (ஐ-ரி)




யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட வெள்ளிவிழாவை முன்னிட்டு மருத்துவ மாணவர்கள் நடத்தும் கலைநிகழ்வின் முதலாம் நாள் நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் (சனிக்கிழமை)மாலை மருத்துவபீட கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதல் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட வாழ்நாள் பேராசிரியர் க.பாலசுப்பிரமணியம், சிறப்பு வருந்தினராகக் கலந்துகொண்ட செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் ஆகியோர் உரையாற்றுவதையும், மருத்துவபீட மாணவிகள் வழங்கிய இசைக்கச்சேரி நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம். (படம்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



இணுவில் கிழக்கைச் சேர்ந்தவரும்
எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவருமான

## திரு. தம்பையா கந்தசுவாமி

(உரிமையாளர், பெஷன் ஹவுஸ், யாழ்ப்பாணம்)

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக 21.04.2004 இல் சத்தியப்பிரமாணஞ்செய்து பதவியேற்றதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இணுவில் சிவகாமி அம்மன், காரைக்கால் விசாலாட்சி விசுவநாதர் ஆலயத் திருப்பணிகள் செவ்வனே சிறப்பாக நடைபெற முன்னின்றுழைக்கும் இவரது சேவை நல்லமுறையில் தொடர எல்லாம் வல்ல பரம்பொருளான இறைவனை இறைஞ்சுகின்றோம்.

காரைக்கால் சிவன்கோவில் வீதி,
சிவன்கோவிலடி, இணுவில்.

திரு.சி.அப்பையா அவர்களும்,
பிள்ளைகளும்,
பேரப்பிள்ளைகளும்.

(31817)(40-11-18-26)


# Diploma in Hardware Engineering

காலம் : 4 மாதம்



12 ஆண்டுகளாக கணனி மென்பொருள் கல்வித்துறையில் அனுபவம் வாய்ந்த நாம் தற்பொழுது Hardware Technology துறையில் ஒரு முழுமையான தொழில்சார் டிப்ளோமா பாடநெறி ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

புதிய பிரிவுகள் அரம்பம் 15.05.2004

விபரங்களுக்கு

ASIAN COMPUTERS

2 G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
✆021-222 5677


# கண்ணீர்க் காணிக்கை



எமது ஆருயிர் நண்பன்

## அன்ரனி பெனாண்டோ றொபின்சன் குமார்

அவர்கள் 07.05.2004அன்று அகாலமரணமானார்.

நண்பனின் திடீர் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் நண்பனின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
பண்டத்தரிப்பு வாழ் நண்பர்கள்.

(31818)(38-11-18-26)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா தர்மலிங்கம்

(ஓய்வுபெற்ற முகாமையாளர், உடுப்பிட்டி ப.நோ.கூ.ச.கிளை)

உடுப்பிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டி, புவனேஸ்வரி அம்மன் கோயிலடியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா தர்மலிங்கம் அவர்கள் (08.05.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - சின்னப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னாச்சிப்பிள்ளை, பொன்னையா, பாக்கியம் மற்றும் நல்லையா, நல்லம்மா, தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் றஞ்சித் (சுவிஸ்), உஷாந்தினி, கிருஷாந்தினி, கஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கருணைநாதன், வீரசிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும் நிவேதிகாவின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற செல்லத்தம்பி, சுப்பிரமணியம், கந்தசாமி மற்றும் சிவபாக்கியம், சின்னத்துரை ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத் தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கருணைநாதன், வீரசிங்கம்
*(மருமகன்மார்).*

*உடுப்பிட்டி.*

(சி-34785)

## திருமதி வடிவேல் ஜானகி அம்மா



தாவடியை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி வடிவேல் ஜானகி அம்மா நேற்று (09.05.2004) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வடிவேலுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற அழகர்சாமி - செல்வநாச்சியார் தம்பதிகளின் அன்புப் புதல்வியும் இராஜலட்சுமி, ராகினி (கனடா), மகேந்திரன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் துஷ்யந்தன் (சுவிஸ்), துஷ்யந்தினி (ஜேர்மன்), மதன் (ஜேர்மன்), முகுந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும் உதயகுமார் (ஜேர்மன்), புவேதினி ஆகியோரின் மாமியாரும் ராஜ்குமார் (மக்கள் வங்கி) அவர்களின் மைத்துனியும் ராஜ்கரன் (கனடா), ராஜ்பவன் (கனடா) ஆகியோரின் பெரிய தாயாரும் துவாரகன் (ஜேர்மன்), கௌதமன் (ஜேர்மன்), விதுஷன் (ஜேர்மன்) ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2004) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் மாலை 4 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
முகுந்தன் (மகன்).

*தாவடி தெற்கு,*
*கொக்குவில்.*

(31819)(34-11-18-26)

ஈரவிழிகளுடன்

# ஈராண்டு நினைவஞ்சலி



தோற்றம்
28 - 07 - 1953

மறைவு
04 - 05 - 2002

அமரர்

## தம்பிஜயா குமாரசாமி (J.P.)

(வேலணை)

ஓராண்டு ஈராண்டாய்
ஆண்டு பலநீண்டாலும்
பல்லாண்டு வாழ்க்கைப்
பாசவலைப் பின்னலறா
நேச நினைவுகளெம்
நெஞ்சில் நிலைத்திருக்கும்.

*ஆடியபாதம் வீதி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

(31815) (24-11-18-26)

- குடும்பத்தினர்.

நெக்குருகி நினைந்து

# கண்ணீர் வடிக்கின்றோம்

மரணச்செய்தி கேட்டு
கலங்குகின்றோம் நாம் இங்கு!



கைதடி கிழக்கைச் சேர்ந்தவரும்,
எமது அன்புக்குரியவரும்,
சிறந்த பண்புக்குரியவருமான

அமரர்

## சின்னத்தம்பி செல்லத்துரை

அவர்கள் 03.05.2004 அன்று சுவிஸில் காலமானதையிட்டு நாம் தாங்கொணாத வேதனையும் கவலையும் அடைகின்றோம். ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகிறோம்.

*மாவடியில் சேவடிகள் பதித்து வாழ்ந்து*
*மலர் முகத்தால் மக்களிருள் போக்கி நின்றாய்!*
*வகையாத் தொண்டாலே வள்ளலாகி*
*வக்கற்றோர் வாழ்வுக்குத் தீபமானாய்!*
*பகையறியா(ப்) பெரியப்பா போன மாயம்*
*பாச நெஞ்சைப் பிழிகிறது என்ன செய்வேன்!*
*தகைசான்ற செல்லத்துரை நாமம் வாழ*
*தம்பிப்பிள்ளை புஷ்பராசா*
*பரம்பரை நாம் உறுதிகொள்வோம்!*

*மகனென(ப்) பாசமூட்டி மருகனாய்க் கண்ட மாமி*
*மரணத்தின் சேதிகேட்டு மலையினை ஒத்து நின்று*
*மகள் ராணியின் முகத்தைப் பார்த்தும்*
*மழலைகளின் அன்புக் குரலைக் கேட்டும்*
*சகடதர முத்தாச்சி சின்னத்துரை நாமம் பாடி*
*சகத்தினிலே வாழ்வேதும் வேண்டாமென்று*
*திகைத்துப் போய் நிற்கின்ற காட்சி சொல்ல*
*தமிழ் எழுந்து வரவில்லை என்ன செய்வேன்?*

*கைதடி கனகராயன் குளம், நாலாம் குறுக்குத்தெரு*
*ஐந்தாம் குறுக்குத் தெரு மலியான் குறுக்குத் தெரு*
*கால்பதித்த இடமெல்லாம் கலை படித்துச் சென்றுள்ளாய்!*
*மெய்வருந்தும் பலரோடு மேல்நாடும் கால்பதித்து*
*மழலைகள் இன்பத்தில் மனநிறைவு கண்டிட்டாய்!*
*தெய்வத்தின் வீதியெல்லாம் நின் திருப்பாதச் சுவடுகள்*
*தூய நின் உள்ளத்தை நிஜமாக்கும் பேரேடு*
*நெய்விட்ட நெருப்பாக நெஞ்சங்கள் நெகிழ்ந்துருக!*

*சிவகண்ணன் சீமையில் நின் செய்திகேட்டு*
*சொரிகின்ற கண்ணீர் துடைப்பாரில்லை*
*புஷ்பராசா, விஷ்ணுதேவி, ஸ்ரீரங்கநாதன், ராஜிகா,*
*தவரஞ்சிதா, பதிவர்மன், சகோதரிகள் பங்கிட்டு*
*ஓலமிட்டு அழுதனர்! அவனியிலே உண்மையொன்று*
*இதுவானாலும் உலகியலை ஒத்ததுதான் எமது வாழ்வும்*
*தவப்பயனாய் எம்மிடையே வாழ்ந்து போனாய்!*
*தூய உடல் காணாது துடிக்கின்றோம் நாமிங்கு!*
*தம்பிப்பிள்ளை புஷ்பராசா பரம்பரையால் சாந்திகொள்வோம்.*

*மண்ணினைக் காத்த மைந்தன் மலரொடு தூபமேந்தி*
*விண்ணவர் ஏங்கும் நாளாய் விரைகின்ற நாளாம்*
*இன்று 10.05.2004 திங்கட்கிழமை!*

(31816)

தம்பிப்பிள்ளை புஷ்பராசா,
வைகுந்தர் செல்லமுத்து,
"நியூ லீலாவதி பல்பொருள் வாணிபத்தினர்".

கைதடி மத்தி,
கைதடி.

(34-11-18-26)





# நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

| ஐம்பதாவது சிரார்த்ததினம் | | | பத்தாவது சிரார்த்ததினம் | | |
|---|---|---|---|---|---|
| தோற்றம் 08 – 10 – 1897 |  | மறைவு 22 – 04 – 1954 | தோற்றம் 12 – 01 – 1912 |  | மறைவு 16 – 11 – 1994 |

அமரர்
## இளையதம்பி பொன்னம்பலம்

திருமதி
## சீதேவிப்பிள்ளை பொன்னம்பலம்

திதி:10.05.2004

தந்தையும்தாயும் கண்கண்ட தெய்வமென
முந்தையோர் மொழிந்த முதுமொழியைச் சிந்தையினில்
ஐம்பது ஆண்டுகளாய் ஆற்றுகிறோம் நினைவுடனே
செம்மையுறு சிரார்த்தம் தான்.

அப்பா நீங்கள் அமரர் உலகடைந்து
ஆண்டுகள் ஐம்பது ஆகின்ற நாளினிலே
செப்பமாய் உங்கள் திருவடி போற்றி
செய்த கடமைகள் தினைத்துணைமறவோம்
எப்போதும் எங்கள் இதயத்தில் உள்ளீர்
ஏற்றமும் சிறப்பும் இனியவை ஆகும்.
தப்பாமல் சிரார்த்தம் ஆண்டுகள் தோறும்
செய்துமே தந்தையின் ஆசியும் பெற்றோம்.

மாண்புறு மலேஷியா நாட்டினில் உங்கள்
வான்புகழ் சேவையை மெச்சினர் பலரும்
தான்புகையிரத நிலைய அதிபருமாகி
காண்பவர் மனதைக் கவர்ந்திட வாழ்ந்தீர்

ஆண்டுகள் முப்பத் தெட்டினில் ஓய்வினைப் பெற்று
மீண்டும் சொந்த நாட்டினில் வாழ்வினை நாடி
நீண்ட நினைவொடு வந்தனன் உறவுகள் மகிழ
ஆண்டவன் அருளால் இன்பவாழ்வு இனிதே பெற்றீர்

மக்கட் செல்வம் மகிழ்வுடன் வளர
மனைவியும் விளக்காய் ஒளிர்ந்திட நாளும்
அக்கம்பக்கம் அயலவர் அனைவரும்
அன்புடன் வரவே அரவணைப் பீரே
புகுந்த இடமெலாம் பொன்னம் பலத்தார்
புகழ்தனைப் பரப்பும் புதல்வராய் நாமும்
சக்தி படைத்தோம் தந்தையை நினைவோம்
தந்தை தாயைப் போற்றிடல் கடனே.

*பொ.பாலகிருஷ்ணன்,*
*வைத்தியர்வளவு,*
*அளவெட்டி வடக்கு,*
*அளவெட்டி.*

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

(31799)(12-38-30)

# பெண்ணுக்கு 6 மாத கடூழியச் சிறை

கசிப்பு உற்பத்தி செய்வதற்கான கோடாவைத்திருந்த பெண்மணி யொருவருக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றம் ஆறுமாதக் கடூழியச் சிறைத தண்டனையும், 50 ஆயிரம் ரூபா தணடமும் விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

சங்கானை நிற்சாமத்தைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் கனகம்மா என்பவருக்கே இந்தத் தண்டனை வழங்கப் பட்டது.

சங்கானைப் பொலீஸாரால் 80 த்றாம்ஸ கோடா வைத்திருந்தமைக்காக கைதுசெய்யப்பட்டு மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் அவர் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார்.

ஏற்கனவே குறிப்பிட்ட நபருக்கு ஏதிராக நீதிமன்றில் பல கசிப்பு உற்பத்தி தொடர்பான வழக்குகள் இருப்பதாக நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதைக் கருதத்தில் கொண்டு இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

(3-86)

# ஓராண்டு நினைவலைகள்

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 13 - 12 - 1936 |  | 23 - 04 - 2003 |

அமரர்
## கணபதிப்பிள்ளை சபாரத்தினம்

(ஓய்வுபெற்ற உள்ளூராட்சிமன்ற உத்தியோகத்தர்)

திதி: ஸப்தமி 10.05.2004

துணையாக நின்று தூய நல் வழிகாட்டி
நிறையாத வேளையில் நீங்கள் பிரிந்ததேனோ?
அணையாத விளக்காய் அவனியிலே என்றும்
அன்புயர்ந்த தெய்வமே! எம் அகங்களிலே வாழ்ந்திடுவீர்!

உங்கள் பிரிவால் துயருறும்:
**மனைவி, பிள்ளைகள்,**
126/12, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

*திக்கரை வீதி,*
*களபூமி,*
*காரைநகர்.*

(31799)(12-38-30)

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 575 | டிக்கட்டின் நிறம் - சிவப்பு | |
| திகதி | 07-05-2004 | செல்லுபடியாகும் தொடர் இல. 5646858-5657466 | |

லக்கினம் மகரம்

வெற்றி இலக்கங்கள்

**14 18 32 36**

ஜக்பொட் பரிசு ரூபா.10,00,000/- வெல்லப்பட்டுள்ளது.

இந்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட் ரூபா. 10,00,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1.இல | 2,35,674 | 10/- | 23,56,740/- |
| 2.இலக்கங்கள் | 21,720 | 20/- | 4,34,400/- |
| 1.இல + லக்கினம் | 21,528 | 30/- | 6,45,840/- |
| 2.இல + லக்கினம் | 1,940 | 100/- | 1,94,000/- |
| 3.இலக்கங்கள் | 578 | 500/- | 2,89,000/- |
| 3.இல + லக்கினம் | 58 | 5,000/- | 2,90,000/- |
| 4.இலக்கங்கள் | 03 | 1,00,000/- | 3,00,000/- |
| 4.இல + லக்கினம் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| மொத்தம் | 2,81,502 | - | 55,09,980/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 55,09,980

தொடர் இல. 4673342 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2004 மே 11ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்வுக்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

5651005-5-57
5652154-9-27
5650538-9-55
5654454-1-03
5652532-3-08

# மரண அறிவித்தல்

## திருமதி இரஞ்சினிதேவி (குட்டி) பாலகுமரன்

(ஆசிரியை, யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் கோணாவளை லேன், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரஞ்சினிதேவி பாலகுமரன் நேற்று (09.05.2004) ஞாயிற்றுக்கிழமை அகாலமரண மடைந்துவிட்டார்.

அன்னார் பாலகுமரன் (மோகன்-கணித ஆசிரியர் PVT) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து செல்லம்மா தம்பதியினரின் மகளும் திருநெல்வேலியைச் சேர்ந்த பசுபதி-வில்வராணி தம்பதியினரின் மருமகளும் சண்முகநாதன் (கனடா), சிறீஸ்கந்தராசா (கனடா), பத்மநாதன் (கனடா), யோகராசா, ராஜேஸ்வரி-ஜெயதேவன் (ஹற்றன் நஷனல் வங்கி, திருமலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாலரஞ்சன், பாலமுரளீதரன், பாலமுகுந்தன் ஆகியோரின் அண்ணியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ப.பாலகுமரன் (கணவர்),
சு.பசுபதி (மாமன்),
ச.யோகராசா (சகோதரன்).

*கலாசாலை வீதி,*
*திருநெல்வேலி.*

(21820)


உலகப்புகழ் பெற்ற தரமான PI, PII, PIII Lap Top (TOSHIBA), கணனிகளை மலிவான விலைகளில் பெற்றுக்கொள்ளுங்கள்!

**P1 -200MHZ/1.6GB/32 Ram - 12,900/=**
(மொத்தமாக பெற்றுக் கொள்பவர்களுக்கு விசேட கழிவுகள் உண்டு)
**P11 366MHZ/6GB/64RAM -21,100/=**
(With Multimeedia)
**P111-550MHZ/8GB/128 Ram - 32,000/=**

(with modem and multimeedia)
Lap Top (TOSHIBA) கணனிகள்
Intel celeron 600MHZ/128Ram/6GB -50,000/=
(WITH 56KBPS Moden)



BRAND NEW COMPUTERS
PIVI 8GHZ/128MB Ram/40GB HDD -52,000/=
PIV2 8GHZ/256MB Ram /40GB HDD -62,900/=
PIV2 0GHZ/256MB Ram/40GB HDD -54,000/=
AMD Athion 2.0GHZ/128MB Ram 40 GB HDD -46,000/=
(15' monitor 52xcd Ram, m/m Speakers Keyboard mouse and pad)
விசேட விலை -**UPS Powertree 4,200/=**

24 மணிநேர இன்ரநெட் மணித்தியாலத்திற்கு 40/= மட்டுமே!
Net 2Phone நிமிடம் ஒன்றுக்கு 6/= மட்டுமே!
அடைக்கல அன்னை ஆலயம் 4ஆம் குறுக்குத்தெரு ஆஸ்பத்திரி வீதியில் இயங்குகின்றது. (O.L.R.Church)
அங்கத்தவர்களுக்கு விசேட சலுகைகள்

(C/34750)

NORTH EAST TECHNOLOGIES
34, Saddanathar Road, Nallur, Jaffna.
T.P : 021-222 3786, 0777-708498 (hotline)
NET





சுயதொழில் பயிற்சி



ஸ்கிறீன் பிரின்டிங் வகுப்புகள்
ஓர் அரிய சந்தர்ப்பம்! விசிட்டிங் கார்ட், திருமண அழைப்பிதழ், லெட்டர் பேட், பொலித்தீன், CD, பிளாஸ்டிக், மரம் மற்றும் Textile (துணிகளில்) பிரிண்டிங் எம்போஸ் பிரிண்டிங் இன்னும் பலவகையான பொருட்களில் பிரிண்டிங் செய்வதற்கான பயிற்சியினை வழங்க இந்திய அச்சுக்கலை நிபுணர் R. பரதன் D.P.Tech அவர்கள் வருகை தந்துள்ளார். வயது வரம்பு தேவையில்லை. பயிற்சிநெறி முடிவில் தரமிக்க சான்றிதழும், தொழில் தொடங்கும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
மே மாதம் **22, 23ம்** திகதிகளில் வகுப்புகள் நடைபெறும்.
உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

(C/347871)

TALENT

London Language School
No. 774, Hospital Road, Jaffna.
T.P. 0777 2223000

மேலதிக விபரங்களுக்கு
D. Anto Dinesh M.T.Sk. (Dip..)
Director - Archanah Academy - Sri Lanka.
T. P. No 0777 706334, 0777 108423


# உணர்ந்தார்கள்

தாய், தந்தையார், சகோதரர்கள், சகோதரிகள் மகன், மகள் யாவரும் என்னால் கூறப்பட்ட வழியில் தங்களுடைய தனிப்பட்ட சுதந்திர உரிமைகளை கடந்த பொதுத்தேர்தலில் பேணிப் பாதுகாத்தவர்கள்.

ஒவ்வொருவரும் நாடுமுழுவதும் அமைதியும் ஒழுக்கமும் நிலவ, கௌரவமான முறையில் முயற்சி செய்தனர். இந்த நிலைமையை எதிர்காலத்திலும் காப்பாற்றுவதால் ; ஒவ்வொரு தனிப்பட்டவரும் தங்கள் எதிர்காலத்தை சிறந்ததாக்கலாம்.

ஒவ்வொருவரும் தங்கள் மனோதத்துவத்தை பலப்படுத்த வேண்டுமென அறிவுறுத்தப்படுகின்றது.

சிக்கனமாக எண்ணவும் நற்பயனளிக்கும் வழியைத்தேடி அதனைப் பின்பற்றவும்

சகல இலங்கையருக்கும் நன்றி!

SIDDHALEPA வைத்தியர்

## ரிஷிகாளான் அலுவலகம் திறப்பு

யாழ்ப்பாணம்,மே10

யாழ். மாவட்டத்தில் மூலிகையின் அரசன் என்ற ரிஷிகாளான் மூலிகை தொடர்பான அலுவலகம் நேற்று யாழ். தட்டாதெருச் சந்திக்கு அருகில் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

ரிஷி காளானின் மூலிகைத் தேவைகள் குறித்து விளக்குவதற்காக கொழும்பிலும் ஏனைய பகுதிகளிலும் இதன் அலுவலகங்கள் திறக்கப்படவுள்ளன. (ஜ-ரி)

## புத்தளத்தில் குடிதண்ணீர் தட்டுப்பாடு

கொழும்பு,மே10

புத்தளம் பகுதியிலுள்ள முந்தல், உடப்பு போன்ற இடங்களில் குடிதண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இங்குள்ள கிணறுகள் யாவும் வற்றிப் போனதாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது.

தூர இடங்களிலிருந்து குடி தண்ணீர் கொண்டு வந்து குடி தண்ணீர் விற்பனை செய்யப்படுகின்றது. ஒரு குடம் 10 ரூபா முதல் குடி தண்ணீர் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஜ-ரி)

## காலிமுகத்திடலில் ஒதுங்கிய சடலம்

கொழும்பு,மே10

காலிமுகத்திடலில் கடற்கரையோரத்தில் நேற்று ஆண் ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியுள்ளது.

மொனறாகலை மதகம பிரதேசத்தைச்சேர்ந்த 22 வயதான கருணாரத்ன பண்டார என்பவரின் சடலமே அது என அடையாளம் காணப்பட்டுள்ளதாக புறக்கோட்டைப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

வெசாக் விழாவைக் கண்டுகளிக்க கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு வந்துள்ள இவர் கடலில் குளிக்கச் சென்றபோதே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது எனப் பொலீஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ஐ-க-8)

## மன்னார் வைத்தியசாலை தரம் உயர்வு

மன்னார்,மே10

மன்னார் ஆதார வைத்தியசாலை கடந்த மார்ச் மாதம் 18ஆம் திகதி முதல் பொது வைத்தியசாலையாக சுகாதார அமைச்சினால் தரமுயர்த்தப்பட்டுள்ளது.

மன்னார் பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் திருமதி எஸ்.ஆர்ஜீட் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன், இவ் வைத்தியசாலையில் மகப்பேற்று வைத்திய நிபுணர் ஒருவரும் மயக்க மருந்து நிபுணர் ஒருவரும் உலக சுகாதார அமைப்பின் அனுசரணையுடன் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## பொதுக்கிணற்றை துப்புரவு செய்யக் கோரிக்கை

குருநகர்,மே10

குருநகர் றெக்கிளமேசன் மத்திய கிழக்கு வீதியில் அமைந்துள்ள பொதுக்கிணற்றை துப்புரவு செய்ய நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதியில் உள்ள மக்கள் யாழ்.மாநகரசபையைக் கோரியுள்ளார்கள்.

றெக்கிளமேசன் மத்திய கிழக்கு வீதியின் தெற்குப் புறமாக, முதலாவது ஒழுங்கையில் அமைந்துள்ள இப்பொதுக் கிணறு சேதமடைந்து பாழடைந்தநிலையில் காணப்பட்டது. பின்னர் சமுர்த்தி அமைப்பினால் இக் கிணறு புனரமைப்புச் செய்யப்பட்டுள்ள போதிலும், மக்கள் இக் கிணற்றை பயன்படுத்தாததால் சேறு மண்டிக் காணப்படுகிறது.

இந்த ஒழுங்கையில் அமைந்துள்ள குடியிருப்பைச் சேர்ந்த மக்கள் மீளத் தங்கள் வீடுகளில் குடியமர்ந்து வருவதனால் அவர்களுக்கு இப் பொதுக்கிணறு அவசிய தேவையாக உள்ளது. இதனைத் துப்புரவு செய்வதற்கு யாழ்.மாநகரசபை மற்றும் பொது அமைப்புக்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அவர்கள் தெரிவித்தனர். (ஜ-51)

# மனித நேயத்தை வளர்க்க சிறந்த சாதனம் நாடகம்

நாடகம் மனிதநேயத்தை வளர்க்கும ஒரு தொடர்புசாதனம். நாடகம் மனிதனைப் பண்படுத்தும் வல்லமை கொண்டது. ஒரு நடிகன் நாடகத்தில் சிறந்த நடிகனாக வரமுடியவிட்டாலும் சமுதாயத்துக்கு உகந்த ஒருநல்ல பிரஜையாக வாழமுடியும்.

நாடகக்கலை தொடர்பாக பிரபல நாடகக் கலைஞர் கிறகோரி பிலிப் பேர்மினஸ் தெரிவித்திருக்கின்ற கருத்துத்தான் இது. சுமார் 50 வருடங்களாக நாடகத் துறையில் ஈடுபட்டு இன்றுவரை அந்தத் துறைக்காகவே பணியாற்றிக்கொண்டிருக்கும் பேர்மினஸ் அண்மையில் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 'கலா பூஷணம்' விருது வழங்கிக் கௌரவிக்கப் பட்டுள்ளார்.

அதற்காக அவரது நாடகப் பணி தொடர்பான ஓர் அறிமுகத்தை இங்கு தருகின்றோம். குருநகரில் நிக்கிலாஸ் கிறகோரி, அக்கினேஸ் ஆகியோருக்கு மூத்த மகனாகப் பிறந்தார். கல்வியை புனித பத்திரிசியார் கல்லூரியில் 1960ஆம் ஆண்டு வரை பெற்றுக்கொண்டார்.



1956ஆம் ஆண்டில் "ஒரு புகையிரத நிலையம்" என்னும் நாடகத்தில் நடித்ததன் மூலம் கல்லூரி வாழ்வில் எனது கலை வாழ்வு ஆரம்பமாகிறது.

1956ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை கலைத்துறையில் ஈடுபட்டுவருகிறேன்.

1957, 1959ஆம் அண்டில் கல்லூரியின் பிரமாண்டமான தயாரிப்பான இயேசுவின் திருப்பாடுகளில் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்த இவர் இன்று வரை கலைத்துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்டு வருகிறார். பாடசாலை வாழ்வை 1960 களில் முடித்துக்கொண்டு சமுதாய அரங்குகளில் நுளைந்து "மனிதன் மாறிவிட்டான்", "எங்கே நிம்மதி", "கூடப்பிறந்தாலும்", "இதுவும் சரிதானா", "மேடர்" போன்ற சினிமா சாயல்கொண்ட நாடகங்களில் நடித்துக்கொண்டிருந்த காலகட்டத்தில், அருட்தந்தை நீ.மரியசேவியர் அவர்களின் வேண்டுதலோடு இத்தாலியப் படம் ஒன்றின் மொழி மாற்றத்திற்கு முக்கிய பாத்திரத்திற்கு குரல் கொடுத்திருந்தார்.

1971இல்" அன்பில் மலர்ந்த அமரகாவியம்" என்ற நாடகத்தில் நடித்துப் பாராட்டுப்பெற்றார்.

1973இல் முதலாவது கலைப்பயணம் மேற்கொண்டு இந்தியா சென்று திருச்சி தேவர் அரங்கில் (22.05.1973) 'களங்கம்' 'பலிக்களம்' போன்றவற்றை மேடையேற்றினார்.

பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகளோடு இணைந்து திருமறைக் கலாமன்றத்தில் கலைப்பணியாற்றி வருகின்றார் நாட்டுக்கூத்து, இசைநாடகம், நவீன நாடகம், இலக்கிய நாடகம், வரலாற்று நாடகம், யதார்த்த நாடகம், மௌன நாடகம், தெருக்கூத்து, சிறுவர் நாடகம், வட்டக் களறி முதலியவற்றிலும் பங்குகொண்டேன்.

1974ஆம் ஆண்டு நடைபெற்ற உலகத் தமிழாராயச்சி மாநாட்டில் திருமறைக் கலாமன்றத்தின் சார்பில் நடகம் நடித்துச் சான்றிதழ் பெற்றார்.

நாடக அரங்கக் கல்லூரியின் தயாரிப்புக்களான மஹாகவியின் "கோடை" திரு.தார்சியஸின் "பொறுத்தது போதும்" (ஜனாதிபதியின் நான்கு விருதுகள் பெற்றது) குழந்தை ம.சண்முகலிங்கத்தின் "கூடி விளையாடு பாப்பா","உறவுகள்", தியாகத் திருமணம்'' கலாநிதி மௌன குருவின் "சங்காரம்" முதலியவற்றிலும் கவிஞர் முருகையனின் "வெறியாட்டிலும்" நடித்து நாடகத்துறையில் அனுபவம் மிக்க ஒருவராகத்திகழ்ந்தார். நாடகத்துறையில் ஐம்பது வருடங்களாக உழைத்த கலைஞர் பேர்மினஸ் சொல்கிறார்.

சிறைச்சாலைத் திணைக்களத்தில் சிறை உத்தியோகத்தராகக் கடமையாற்றிய காலத்தில் கைதிகளைப் பழக்கி வெலிக்கடை சிறைச்சாலையில் 1965ஆம் ஆண்டு கொழும்பு விவேகானந்தா சபையின் உதவியுடன் சிறைச்சாலைக்குள்ளும், 1977ஆம் ஆண்டு யாழ்.சிறைக் கைதிகளைப் பழக்கி சீர்திருத்திய கைதி என்னும் நாடகத்தினை யாழ் வீரசிங்கம் மண்டபம், யாழ். குருநகர் கலையரங்கு போன்ற இடங்களில் மேடையேற்றிய இவர், பின்னர் கொழும்பில் சிங்களக்கலைஞர்களுடன் இணைந்து அசோகா, தர்சனா, பலிக்களம் போன்ற மௌன நாடகங்களில் நடித்தார்.

எம் இயக்குநர் இன்னுமொருபடி முன்னேறி 1997, 1998இல் எமது குழுவினரை ஐரோப்பிய நாடுகளுக்கு (ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், ஹொலண்ட், லண்டன்) அழைத்துச் சென்று புலம்பெயர்ந்த மக்களை மட்டுமல்ல பிரான்ஸின் சிறந்த நாடக நெறியாளர் அரியாணியையும் அவர் குழுவினரையும் சந்திக்கும் வாய்ப்பளித்தார்.

04.01.1998 அன்று பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இலங்கை தேசிய சமாதான குழுவினரால் சமாதான முயற்சிக்காக எடுக்கப்பட்ட நிகழ்வில் மன்றத்தின் சார்பாக "சக்தி" என்னும் நாடகத்திலும் நடித்தார்.

**தொகுப்பு: சந்திரமதனா**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாகினி ஆகியவற்றில் நாடகங்கள், நாட்டுக் கூத்துக்களில் நடித்துள்ள இவர் தற்போது மன்றத்தின் செயற்பாடுகளிலும் பாடசாலை நாடகங்களிலும் பங்குகொண்டு பணியாற்றிவருகிறார்.

இந்தக் கலைஞருக்கு 03.12.2000 அன்று திருமறைக் கலாமன்றத்தால் "அங்கவாரிதி" என்ற பட்டமும் 18.11.2001 அன்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் "கலைஞான கேசரி" பட்டமும வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.


பின்னர் கடந்த 2002ஆம் ஆண்டு யாழ் பிரதேச கலாசாரப் பேரவையினால் யாழ். ரத்னா விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட இவர், கடந்த மாதம் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் 'கலாபூசணம்' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் கலைஞரின் கலைப்பணி மேலும் பல காலம் தொடர வேண்டும் என்று 'உதயன்' தனது உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றான். ★




# நாடகக் கலையை வளர்க்கும் ஆவலுடன் அத்துறையில் ஈடுபட்டுவரும் இளம் கலைஞர்

**கலை** என்பது புனிதமானதும் தெய்வீகமானதுமான ஓர் உன்னத வடிவம். அத்தகைய தன்மை பொருந்திய கலையானது ஏதோவொரு வகையில் எல்லோரிடத்திலும் குடியிருக்கும். ஆனால், சிலர் மட்டுமே தம்முள்ளே இயற்கையாகவேயுள்ள கலையாற்றலை மேம்படுத்தி தம்மையும் வளப்படுத்தி சமூகத்தையும் பலப்படுத்துகிறார்கள்.



அந்த வகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் வளர்ந்துவரும் நாடகக் கலைஞர்களில் குறிப்பிடத்தக்கவரான நித்தியானந்தம சுகீதரன் கலைச்சுடர் பகுதியில் அறிமுகமாகிறார்.

இவர், தெல்லப்பழை - பன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் தற்போது மானிப்பாயில் வசித்துவருகிறார். தற்போது அவருக்கு வயது 26.

இவர் ஆரம்பக் கல்வியினை பன்னாலை சேர்.கனகசபை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையிலும், உயர்கல்வியினை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையிலும் கற்றவர்.

இவர் படிக்கின்ற காலத்திலே தன்னை ஒரு நாடகக் கலைஞனாக அறிமுகப்படுத்திக்கொண்டார். 15 வயதிலே பாடசாலைகளில நடக்கின்ற நாடக நிகழ்ச்சிகளில் பங்குபற்றியுள்ளார். இதுவரை நீங்கள் நடித்த நாடகங்களைப் பற்றிசொல்லுங்களேன் என்று கேட்டதற்கு,

காத்தவராயன் சிந்து நடைக்கூத்தில் பார்வதி, பூமாதேவி, ஆரியப்பூ மாலை ஆகிய பெண் பாத்திரங்களையும் சிவன், நாரதர், காத்தான், சின்னான் ஆகிய ஆண் பாத்திரங்களையும் ஏற்று நடித்துள்ளேன்.

இவர் காத்தவராயன் சிந்து நடைக்கூத்தில் மேற் குறிப்பிட்ட பாத்திரங்களில் 25 மேடைகளில் நடித்துள்ளார்.

சூடாமணி நாடகத்தில் ஆஞ்சநேயராகவும், பக்த நந்தனார் எனும் இசை நாடகத்தில் பக்த நந்தனராகவும், அப்பூதி அடிகளார் நாடகத்தில் திருநாவுக்கரசராகவும் நடித்துப் பலரது பாராட்டுக்களையும்பெற்றுள்ளார்.

வரலாற்று நாடகங்கள் மட்டுமல்ல சமூக நாடகங்களான கலையாத ஓவியம், விடிவைத்தேடி ஆகிய நாடகங்களிலும் இவர் சிறப்பாக நடித்துளளார்.

**தொகுப்பு: எஸ். கவிதரன்**

தாய்மனை, நாய்மனை போன்ற நாடகங்களிலும் இவர் நடித்துள்ளார். பாரம்பரிய கலை பண்பாட்டுக் கழகத்தினரால் 2003 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட நாடகப்போட்டியில் இவர் சிறந்த நடிகருக்கான விருதினைப் பெற்றுத் தங்கப்பதக்கத்தையும் பெற்றுள்ளார்.

இதுமட்டுமல்ல, அண்மையில் ஏ. ரி. பொன்னுத்துரையின் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட தனிநடிப்புப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.



இவர் தனது கலைததுறை ஈடுபாட்டின் வழிகாட்டிகளாக உடுவிலைச் சேர்ந்த ஆசிரியர் கலாவித்தகர் எஸ். சிவராசாவும், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் அதிபர் அமு. அருணாசலம் ஆகிய இருவரையும் நன்றியுடன் நினைவுகூருகின்றார்.

எதிர்காலத்தில் கலையுலகில் ஓர் உன்னத இடத்தைப் பிடித்து தனனை ஒரு கலைஞனாக நிலைநிறுத்த வேணடும் என பதில் இவர் முனைப்புடன் செயற்படுகிறார்.

முயன்றால் மனிதனால் முடியாதது நிச்சயம் இந்தக் கலைஞர் கலைவானில் பிரகாசிக்கவேண்டும் என்று வாழ்த்துவோமாக. ★

# மழையை அடுத்து நெருப்புக் காய்ச்சல் மேலும் தீவிரமாகப் பரவும் ஆபத்து!

குருநகர்,மே10

யாழ் குடாநாட்டில் தற்போது பெய்து வந்த மழைகாரணமாக குடிதண்ணீர் மாசடையும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதனால் ஏற்கனவே பரவியுள்ள நெருப்புக்காய்ச்சல் நோய் பல மடங்கு அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என எச்சரிக்கப்பட்டிருக்கிறது. எனவே, மக்கள் இந்நோய் பரவாமல் தடுக்க சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு யாழ். பிரதி மாகாணச் சுகாதாரப் பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரம் அறிவுறுத்தியுள்ளார்.

கொதித்து ஆறிய நீரைப் பருகுதல் -

மழை காரணமாக தேங்கும் நீர், நுளம்புப் பெருக்கத்துக்கும் மலேரியா, டெங்கு நோய்கள் பெருகவும் வழி செய்யுமாதலால், ஒவ்வொருவரும் தத்தமது வளவுகளில் உள்ள நீர்க் கொள்கலன்களை (சிரட்டைகள், பேணிகள், ரயர்கள், உடைந்த பானை, சட்டி, பிளாஸ்ரிக் கொள்கலன்கள், பிளாஸ்ரிக் வகைகள்) அழித்தல், கவிழ்த்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை இல்லாது ஒழிக்க முடியும்.

இவ்வாறு செய்வதன் மூலம் டெங்கு, மலேரியா நோய் ஆபத்தையும் நுளம்பினால் ஏற்படும் அசௌகரியங்களையும் குறைக்கமுடியும். ஒவ்வொருவரும் சிறுசிறு அளவில் செய்யும் இத்தகைய செயற்பாடுகள் முழு மக்களைக் காப்பாற்றும் உன்னத பணியாக அமையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-51)

# 1,200 மருத்துவ மாதர்களை புதிதாகச் சேர்க்க முடிவு

கொழும்பு,மே10

குடும்ப சுகாதார சேவையை விருத்தி செய்வதற்காகப் புதிதாக ஆயிரத்து 200 மருத்துவ மாதர்களை சேவையில் சேர்ப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

நேற்றுமுன்தினம் கொழும்பு மகாவலி நிலையத்தில் இடம்பெற்ற உலக மருத்துவ மாதர்களுக்கு வைபவத்தின்போது உரையாற்றிய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் இதனைத் தெரிவித்தார்.

புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படவுள்ள மருத்துவ மாதர்களுக்கு ஒன்றரை வருடகாலப் பயிற்சி வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அரச மருத்துவ மாதுக்கள் சங்க நிர்வாக அதிகாரி எஸ்தேவராஜா உரையாற்றும்போது, மருத்துவிச்சிமாருக்கு உயர்டிப்ளோமா பயிற்சிகளை அளிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு சுகாதார அதிகாரியிடம் கேட்டுள்ளார். (ஐ-ரி)

# ஒஸ்மானியா மாணவர்களுக்கு சாயி நிறுவனம் உணவுப்பொதி

வடபிராந்திய சத்திய சாயி சேவா நிலையத்தினால் யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரி மாணவர்களுக்கு ஒரு தொகை உலர் உணவுப் பொதிகள் நேற்று வழங்கப்பட்டன.

யாழ் ஒஸ்மானியாக் கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் எம்.எஸ்.ஏ.எம். முபாறக் தலைமையில் நேற்றுக் காலை நடைபெற்ற வைபவத்தில் வடபிராந்திய சத்திய சாயி சேவா நிலையங்களின் இணைபபாளரும் மல்லாகம் நீதிமன்ற பதில் நீதிபதியுமான வசந்தசேனன், முஸ்லிம் வட்டார மக்கள் பணிமனை தொடர்பக இணைப்பாளரும் முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினருமான மௌலவி சுபியான் ஆகியோர் மாணவர்களுக்கான உலர் உணவுப் பொதிகளை வழங்கினார்.

சமூக ஒற்றுமையை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் வகையிலேயே முஸ்லிம் மாணவர்களுக்கு இந்த உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. எதிர்வரும் காலங்களிலும் இவ்வாறான செயற்றிட்டங்கள் தம்மால் முன்னெடுக்கப்படும் என்று வடபிராந்திய சத்தியசாயி நிறுவனங்களின் இணைப்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை -

ஒஸ்மானியாக் கல்லூரியில் கல்வி கற்கும் சுமார் 130 மாணவர்களுக்குத் தினமும் காலை உணவை வழங்குவதற்கு வடபிராந்திய சத்திய சாயி நிறுவனம் விரைவில் நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

## மின் விசிறி தலையில் வெட்டி இளைஞர் காயம்

கடை அலுமாரியில் பொருள்கள் அடுக்கிக்கொண்டிருந்தவர் மின்விசிறி தலையில் வெட்டிக் காயமடைந்த சம்பவம் கடந்த 7ஆம் திகதி காலை சாவகச்சேரி நகர்ப்பகுதியில் இடம்பெற்றது.

சாவகச்சேரியைச் சேர்ந்த எம்நந்தகுமார் (வயது-26) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை -

வீதியின் குறுக்கே சைக்கிளில் வந்த சிறுவனைக் காப்பாற்ற திடீரென பிரேக் பிடித்த மோட்டார் சைக்கிளோட்டி தூக்கி வீசப்பட்டு காயமடைந்த சம்பவமும் கடந்த 7ஆம் திகதி மீசாலையில் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த எஸ்.உதயகுமார் (வயது -26) என்பவரே காயமடைந்து சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுளளார். (8-117)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்


## விற்பனைக்கு

83, றக்கா றோட், சுண்டுக்குளியில் கச்சேரியை அண்டிய சூழலில் 3½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 19/2, காட்டுக்கந்தோர் வீதி, சுண்டுக்குளி. (31784)

நல்லின அல்ஷேசன் பெண் நாயும் குட்டிகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: பாலசூரியன், 147, மனோகராச் சந்தி, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (31796)

தரமான பகிரா இன புறொயிலர் குஞ்சுகளும் டிக்கந்த பாம் புறொயிலர் குஞ்சுகளும் (விலை 35/- ரூபாவுக்கு) ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் முன்கூட்டியே பதிவுசெய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: வி.குணபாகன், 343, கே.கே.எஸ். வீதி (முட்டாஸ் கடைச்சந்திக்கு அண்மையில்), யாழ்ப்பாணம். T.P.: 222 3353. (31751)

பிறிமா, நெல்பாம், பிக்கந்த பேட்டுக்குஞ்சுகள் முன்கூட்டியே பதிவுசெய்து பெற்றுக்கொள்ளலாம். சேவல் குஞ்சு ஒவ்வொரு புதன்கிழமையும் பெற்றுக்கொள்ளலாம். (ரூபா 8/=) தொடர்பு: வி.குணபாகன், 343, கே.கே.எஸ். வீதி (முட்டாஸ் கடைச்சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். T.P.: 222 3353 (31750)

கலர் மீன்கள், தொட்டிகள், கொககொடைல், ஆபிரிக்கன் லவ்பேட்ஸ், யாவாபரட், லவ்பேட்ஸ் குருவிகள், கூடுகள், அடுக்குச் செவ்வரத்தம் பூங்கன்றுகள் மஞ்சள் மொசந்தாஸ் மற்றும் டல்மேசன், பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 40/11, சீனியர் லேன், தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம். (31648)

நான்கு நாள் வளர்ச்சியடைந்த பிறீமா இன சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.: 3529, 2867. P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (31810)

## வாடகைக்கு

ஆனைக்கோட்டைச் சந்தியில் கடையொன்று வாடகைக்குண்டு. தொடர்புகளுக்கு: மெரீன் பேக்ஹவுஸ், ஆனைக்கோட்டைச் சந்தி, தொலைபேசி இல. 021-222-7790, 077 - 6102743. (31780)

## தேவை

மாநகர சபை எல்லைக்குள் பாடசாலைகளுக்கு அருகில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: 206/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (31808)

## தவறிவிட்டது

எனது சாரதி அனுமதிப்பத்திரம் (தற்காலிகமானது) பருத்தித்துறைக்கும் அச்சுவேலிக்கும் இடையே தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மா.சிவமூர்த்தி, வீடியோ கலாமினி, அச்சுவேலி. (T.P.: 0777 111018) என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (31764)


## வான் - சைக்கிள் விபத்தில் மாணவன் ,காயம்

தென்மராட்சி,மே10

சாவகச்சேரி, சங்கத்தானைப் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற வான் - சைக்கிள் விபத்தில் பாடசாலை மாணவன் காயமடைந்துள்ளான்.

சாவகச்சேரி, இராமலிங்கம் வீதியைச் சேர்ந்த கோபாலகிருஷ்ணன் கிருஷ்ண பிரசாத் (வயது 16) என்னும் மாணவனே காயமடைந்தவனாவான்.

இவர், காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளான்.

(8-117)

## ஆவரங்கால் மணிமண்டப நிதியம் பல்கலை. மாணவருக்கு நிதி உதவி

யாழ்ப்பாணம்,மே10

கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் இருந்து பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான வறுமைக்கோட்டுக்குக் கீழுள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு உதவ ஆவரங்கால் சிவசக்தி அறக்கட்டளை மணிமண்டப நிதியம் தீர்மானித்துள்ளது.

இந்த மண்டபம் நிறுவப்பட்டு ஓராண்டு பூர்த்தியாகும் எதிர்வரும் ஜூலை மாதத்தில் இருந்து இந்த உதவியை வழங்க முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இந்த மண்டபம் மூலம் கிடைக்கும் வருவாயைத் தர்மச் செயற்பாட்டுக்குப் பயன்படுத்த வேண்டும் என அந்த அறக்கட்டளைப் பொறுப்பாளர் வே.சிவசுந்தரம் தீர்மானித்திருந்தார்.

இதற்கமைய பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டில் கல்வி பயிலும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த 25 மாணவர்களுக்கு இந்த உதவி வழங்கப்படும். எதிர்வரும் ஜூலை மாதம் முதல் பல்கலைக்கழகப் படிப்பை முடிக்கும் வரை அவர்களுக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா வீதம் இந்த நிதிஉதவி வழங்கப்படும்.

இந்த உதவியைப் பெறவிரும்பும மாணவர்கள் ஆவரங்காலில் உள்ள அறக்கட்டளை மண்டபத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று விண்ணபிக்கவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ-3)

## கூட்டுறவு அமைப்புகள் மூலம் திட்டங்களை அமுல் செய்ய முடிவு

கொழும்பு,மே10

கூட்டுறவு இயக்கத்தைப் புனரமைப்புச் செய்வதற்கு அரசு பல திட்டங்களை அமுல்படுத்தவுள்ளது. கூட்டுறவு நிறுவனங்களின் நிதி ஸ்திரத் தன்மையை மேலும் வலுப்படுத்த சமுர்த்தி உதவித் திட்டங்கள் யாவும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செயற்படுத்தப்படவுள்ளன என்று நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்:-

இலங்கையின் சனத்தொகையில் 40 சதவீதத்தினர் சமுர்த்தி உதவிகளைப் பெற்று வருகின்றனர். இவர்களுக்கான உணவுப் பொருள்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவே விநியோகிக்கப்பட்டுவருகின்றன.

நாட்டில் உள்ள அனைத்து முக்கிய அபிவிருத்தித் திட்டங்களுக்கும் நிதி பகிர்ந்தளிப்பதற்குக் கூட்டுறவு நிறுவனங்களைப் பயன்படுத்தவுள்ளோம்.

கூட்டுறவு நிறுவனங்கள் மக்கள் சேவையை கருத்திற்கொண்டு செயற்படவேண்டுமென்றும் அமைச்சர் அமுனுகம தெரிவித்தார். (ஜ-30)


# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

Happy Birthday

10-05-2004

திரு.திருமதி ஜெயாந்தன் ரோகினிதேவி தம்பதிகளின் செல்வப் புதல்வி



# ஜனனி

தனது முதலாவதுபிறந்தநாளை இன்று (10.05.2004) திங்கட்கிழமை தனது இல்லத்தில் (ஹொலண்ட்) வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மாச்சிமார், அம்மம்மாமார், மாமாமார், மாமிமார் மற்றும் உற்றார், உறவினர் ஆகியோர் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென உளமார வாழ்த்துகிறார்கள்.

137/3, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம். (34-18-11-24)

தகவல்:
ஜனா வீடியோ (மாமா).




முதன் முறையாக

தொழிற்சாலையின்

5 வருட உத்தரவாதம்

License No : 50445

BS No : 5412:1996
License No : KM41240

516, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 337286 (நேரடி), 324261-5, 337283-5
பெக்ஸ்: 446554

WATERTEC

முத்திரையை அவதானியுங்கள்

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர், 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Access Graphics

# கண்ணீர் அஞ்சலி

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை பகுதித் தலைவர்
திருமதி கு.கிருஸ்ணபாலா ஆசிரியை அவர்களின் அன்புச் சகோதரன்

## சோமநாதன் தினகரன்

அவர்கள் 2004.05.06 அன்று காலமானார். அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவர்களின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை,
யாழ்ப்பாணம்.

அதிபர், உபஅதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பா.அ.சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.

(சி-34781) (24-11-18)

# 6ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
15 - 03 - 1955



உதிர்வு
10 - 05 - 1998

திருமதி

## யேசுதாசன் வசந்தா புஸ்பராணி

ஆண்டுகள் ஆறு போனதம்மா துயரங்கள்
குறையவில்லை!
ஆற நினைக்கின்றோம் அது எம்மால் முடியவில்லை!

29/4, பழைய பூங்கா வீதி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள்.

கரம்பன் தெற்கு,
ஊர்காவற்றுறை.

(31807) (26-11-18-24)


# ஊர்காவற்றுறை பிரதேசசபை வேலைகளுக்கான

# கேள்வி அறிவித்தல்

பின்வரும் வேலைகளுக்குரிய கேள்விப்பத்திரங்கள் 28.05.2004 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் ஊர்காவற்றுறை பிரதேச சபை செயலாளரினால் ஏற்றுக்கொள்ளப்பட இருக்கின்றன.

01. கேள்விப்பத்திரங்களை நிர்மாணப் பயிற்சிநிறுவனத்தில் (இக்ராட்) தரம் 'M 9' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர்களோ அல்லது பொது ஸ்தாபனங்களோ 25.05.2004 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கீழே குறித்த தொகையைச் செலுத்தி ஊர்காவற்றுறை பிரதேசசபைத் தலைமை அலுவலகததில் பெற்றுக்கொள்ளலாம்.
02. கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்பவர்கள் கனிய அளவுச்சிட்டை, கொடுப்பனவு அறிக்கை என்பன தயாரிக்கக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.
03. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை கடித உறையில் இட்டு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த வீதித்திருத்தத்திற்கான கேள்விஎனக்குறிப்பிட்டு அரக்கு முத்திரை வைத்து *"செயலாளர் ஊர்காவற்துறைப் பிரதேசசபை, ஊர்காவற்றுறை'* என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாக அனுப்பி அல்லது தலைமையலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இட்டு சேர்ப்பித்து இரண்டாவது பிரதியை *பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம்* அவர்களுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.
04. கேள்விகள் 28.05.2004 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்குத்திறக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்.
05. கேள்விகளை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ செயலாளருக்கு உரிமையுண்டு.
06. மேலதிக விவரங்களை ஊர்காவற்றுறை பிரதேச சபை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

| இல. | வேலைவிவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விபத்திரப்பணம் (வற்வரி உட்பட) |
|---|---|---|---|
| 01. | புளியங்கூடல் - சுருவில் இணைப்பு வீதி திருத்த வேலை | ரூ. 2,500.00 | ரூ. 345.00 |
| 02. | அனலைதீவு வீடமைப்புத் திட்ட வீதி திருத்தவேலை | ரூ.2,500.00 | ரூ. 345.00 |

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை.
07.05.2004

கு.கணேசலிங்கம்
செயலாளர்,
ஊர்காவற்றுறைப் பிரதேச சபை.

## யாழ்.திருநெல்வேலி மக்களுக்கோர் அரியவாய்ப்பு

ஓடியோ, வீடியோ கசெட், வீடியோ கசெட்களை CD யில் பதிவுசெய்யவும், MP3, DVD கசெட் விற்பனை.

★பழைய புதிய (CD,VCD) பாடல்கள், பக்திப்பாடல்கள்
★பட்டிமன்றங்கள் (லியோனி), VCD, TDK கசெட்
★நகைச்சுவைத்தொடர்கள்
★ வேலன் ★ மெட்டி ஒலி போன்ற சின்னத்திரை தொடர் நாடகங்கள் முதலியவற்றைப் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.

**ஆராதனா ஆடியோ வீடியோ விஷன்**
இல.05, நவீன சந்தை மேல்மாடி,
திருநெல்வேலி சந்தி, திருநெல்வேலி,
☎ 0777 354450 (31824)(37-13-14)

பா.வசந்தன்
உரிமையாளர்.


## 31 ஆம் நினைவு நாள்



அமரர்
**தம்பிராஜா சந்திரராஜா**
*(கணக்காளர், சாமுவேல் அன் சன்ஸ் கொம்பனி லிமிட்டட்)*
10-05-2004

அன்பான கணவனாக
பாசமிகு தந்தையாக
அரவணைத்திடும்
சகோதரனாக எங்களோடு
நிறைவாழ்வு வாழ்ந்து
விண்ணகவீட்டில் நுழைந்திட்ட
அன்புத் தந்தையே - உம்
ஆன்ம சாந்திக்காகஇறைவனை
இறைஞ்சுகின்றோம்.

என்றென்றும் உம் அன்பு
நினைவுகளுடன்.
மனைவி, பிள்ளைக்ள

*183, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.* (31831)(32-13-14-37) T.P 0777 603987

## கண்ணீர் அஞ்சலி



பெரியமாவடி, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக்கொண்ட
**கந்தையா பாலச்சந்திரன்**
(பாலா) B.Com. (Hons)
அவர்கள் 09. 05. 2004 அன்று கொழும்பில் அகால மரணமடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**IPAS இயக்குநர்களும், நண்பர்களும்.**
(சி34792) (37-13-14) T.P.0777-563294

## மரண அறிவித்தல்கள்

### கணபதி சிவனடியான்

*(கிராமசேவையாளர் - J/39 ,எழுவைதீவு)*

அனலைதீவைப் பிறப்பிடமாகவும், ஊர்காவற்றுறையை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி சிவனடியான் நேற்று (2004-05-09) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் நல்லம்மாவின் அன்புக் கணவரும் அகிலா (கனடா), விஜிதா (ஆசிரியை, சிறிய புஸ்பமகளிர் மகாவித்தியாலயம்), ஹாமினி (கலைப்பீடம் 3ஆம் வருடம், யாழ்பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நவீந்திரதாஸ் (கனடா) அவர்களின் மாமனாரும் பகரதன், சாரங்கி ஆகியோரின அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை தொடர்பான விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

*ஊர்காவற்றுறை (மரியாள் கோயிலடி).* (31833)(43-13-14-37)
தகவல்: குடும்பத்தினர்.

### சுந்தரம் பத்மநாதன்

கொழும்பு, இல.80, Ward Place இல் பிறந்தவரும் தற்போது லண்டனில் வசித்தவருமாகிய இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை முன்னாள் செயலாளரும் தமிழ் யூனியன் செயலாளரும் அமெரிக்கத்தூதரக அதிகாரியுமாகிய சுந்தரம் பத்மநாதன் அவர்கள் 07.05.2004 வெள்ளிக்கிழமை லண்டனில் காலமாகிவிட்டார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*NO.1, MIDDLE MEAD,*
*BROODRNBAD VILLAGE,*
*FOLKES - SCORB*
*KENT C 719543*
T.P.-44 1363279287 (31827) (37-13-14)

தகவல்:
பா.பாலேந்திரகுமார்
(மருமகன்)
அராலி வடக்கு.

## எய்ட்ஸ் விழிப்புணர்வு பயிற்சிப் பட்டறைகள்

சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் ஏற்பாடு செய்துள்ள எய்ட்ஸ் விழிப்புணர்வு பயிற்சிப் பட்டறைகள் இரு தினங்கள் நடத்தப்படவுள்ளன. இதில் முதல் இரண்டு பயிற்சிப் பட்டறைகளும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமையும் நேற்றும் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றன.

எய்ட்ஸ் விழிப்புணர்வு தொடர்பான இந்தப் பயிற்சிப் பட்டறையில் கடந்த சனிக்கிழமை பெண்கள் பாலியல் நோய் தொடர்பாகவும் அவை பரவும் விதம் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

நேற்று நடைபெற்ற பயிற்சிப்பட்டறையில் எய்ட்ஸ் மனித உரிமைகள் என்பன பற்றி இரு வகையாக ஆராயப்பட்டது.

"அடிப்படை உரிமைகளும் சர்வதேச மனித உரிமைகளும்" என்ற தலைப்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணைப் பகுதியைச் சேர்ந்த எஸ்.சுரேந்திரன், 'சிறுவர்கள் உரிமைகள்' என்ற தலைப்பில் விசாரணை அதிகாரி எஸ்.பெரோஸ் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

(ஐ-6-9)


### வீடு வாடகைக்குத் தேவை

இரண்டு பேர் கொண்ட குடும்பத்துக்கு திருநெல்வேலி, பலாலி வீதியை அண்டிய பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு:
பா.வசந்தன்
T.P.0777-354450 (31825)(37)

### வேலைக்கு ஆள் தேவை

வீடியோ கடையில் வேலை செய்யத் தகுதிவாய்ந்த பெண்பிள்ளைகள் தேவை. நேரில் வரவும்.

தொடர்பு:
பா.வசந்தன்
T.P.0777-354450 (31825)(37)

### லக்சுமி இணுவில்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடு
சூரியா (2 வேடங்கள்), ஜோதிகா நடித்த மிகப் பிரமாண்டமான தயாரிப்பில்




(ரீல்ஸ்)
தினசரி :10.30, 2.30, 6.30, இரவு 10.00
ஆசனப் பதிவுகளுக்கு: இணுவில் - லக்சுமி சினிமா யாழில் - செல்வா மினி.
(31832)(14-13)

### ராஜா யாழ்ப்பாணம்

தாவதுவது வெற்றி வாரமாக இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
விஜய், த்ரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த




10.30.,2.30, 6.30, 9.30 (பு.நே.)
20 ஆம் திகதி முதல் (ரீல்ஸ்) ஆயுத எழுத்து
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

### நிறைஞ்சனாஸ் சங்கானை

கமல், அபிராமி, நெப்போலியன் நடித்த



விருமாண்டி
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இரவு (பு.நே.)
HELL BOUND
HELL RAISER PART 2 [பயங்கரப் படம்]
(சி34420)(12)

### நாகம்ஸ் சுன்னாகம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதினத்தில் டொல்பி ஒலி அமைப்புடன்
விக்ரம், ஜோதிகா, கபாலி, வடிவேல் நடித்த




காட்சி நேரம்; 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே.)
(C34180)(22)

மே 7 முதல் அருள் திரைப்படம் திரையிடப்படும் இறுதித் திகதி வரை நுழைவுச்சீட்டுக்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்! குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்படும் 3 அதிர்ஷ்டசாலிகளுக்கு பெறுமதிமிக்க பரிசுகள்
1) துவிச்சக்கரவண்டி
2) C.D பிளேயர்
3) மேசை மின்விசிறி


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 19.11.1950 — மறைவு 11.04.2004

**அமரர் சின்னத்தம்பி திருநாவுக்கரசு**

அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

நாளை (11. 05. 2004) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11. 00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் வீட்டுக்கிருத்தியம், ஆத்ம சாந்திப்பிரார்த்தனை ஆகிய நிகழ்வுகளில் பங்குபற்றுவதோடு மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நீங்காத நினைவுகளுடன்:
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள்.

*படித்த மகளிர் குடியேற்றத்திட்டம், மிருசுவில்.* (31822)(37-13-14)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னத்துரை செல்லம்மா



நீலாவத்தை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற சாமுவேலு சின்னத்துரையின் மனைவி செல்லம்மா நேற்று(09-05-2004) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஜீவபாலன் மற்றும் ஜீவராணி, ஜீவசோதி, ஜீவராசன், ஜீவசாந்தம், ஜீவகௌரி ஆகியோரின் தாயாரும் செல்வகுமார், இராசகுமார், பத்மினி, இந்திராணி, சுதாகர், விசுவநாதன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சுதுமலை வடக்கு செல்வகுமார் ஜீவராணியின் இல்லத்தில் இருந்து இன்று (10-05-2004) திங்கட்கிழமை இறுதிக்கிரியைகளின் பின்னர் பிற்பகல் 3 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனக்கிரியைகள் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பாலசுப்பிரமணியம்
பரமேஸ்வரி (மருமகள்)
தெல்லிப்பழை.

*சுதுமலை வடக்கு, சுதுமலை.* (31823)(43-13-14-37)

### கந்தையா தர்மலிங்கம்

*(ஓய்வுபெற்ற கிளை முகாமையாளர், உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்)*



உடுப்பிட்டி தெற்கைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டி புவனேஸ்வரி அம்மன் கோவிலடியை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா தர்மலிங்கம் அவர்கள் 08.05.2004 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா சின்னப்பிள்ளையின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னாச்சிப்பிள்ளை, பொன்னையா, பாக்கியம் மற்றும் நல்லையா, நல்லம்மா, தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் ரஞ்சித் (சுவிஸ்), உஷாந்தினி, கிருஷாந்தினி, கஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கருணைநாதன், வீரசிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும் நிவேதிகாவின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற செல்லத்தம்பி, சுப்பிரமணியம் கந்தசாமி மற்றும் சின்னத்துரை சிவபாக்கியம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.05.2004) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் இல்லத்திலிருந்து தகனக் கிரியைக்காக வல்லை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கருணைநாதன், வீரசிங்கம்
(மருமகன்மார்).

*உடுப்பிட்டி.* (31828)(13-14-37)

### திருமதி மாலினி கணேஸ்வரன்

உடுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாலினி (09-05-2004) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கணேஸ்வரனின் அன்பு மனைவியும் தியாகராசா ஞானம்மாவின் அன்பு மகளும் தயானந்தம் மகேஸ்வரியின் மருமகளும் லக்ஷிகா (உடுவில் மகளிர் கல்லூரி மாணவி), சர்வேஸ் (உடுவில் மகளிர் கல்லூரி), ஹம்ஷிகா ஆகியோரின் அன்புத் தாயாரும் வாமினி, கிருஷ்ணகுமார் (ஜேர்மனி), ஆகியோரின் அன்புச் சகோதரியும் கமலேஸ்வரன் (கனடா), கோணேஸ்வரன், இராமேஸ்வரன், ரோகினி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும் ஆதித்யா, அதிஸ்யா, அனுசன் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-05-2004) திங்கட்கிழமை மாலை 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
*முதலாம் கட்டை, உடுவில்.* (31826)(43-13-14) த.கணேஸ்வரன் (கணி-கணவர்)

### விஸ்வலிங்கம் திலகராயர் (J.P.)

(Rtd. Executive, Brown & Co. Ltd, Colombo)



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் 'பாக்கிய இல்லம்', 51, சந்தனமாதா வீதி, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் திலகராயர் 08.05.2004 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வலிங்கம் - செல்லம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் சுந்தரம் - தங்கம்மா தம்பதிகளின் அருமை மருமகனும காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் தில்லைநாதன் (Austra lia), சிவநாதன் (Australia), கைலைநாதன் (CHF International), ஜெகஜோதி (Australia), கேதீசநாதன் (France), ஞானஜோதி, மங்கள ஜோதி (Australia) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜீனி, அனுஷா (Australia), ரஞ்ஜினி, செல்வநாயகம் (Australia), Lion முத்துக் குமாரசாமி (ஓய்வுபெற்ற உதவி முகாமையாளர், இலங்கை வங்கி), துரைரட்ணம் (Australia), அனுசியா (France) ஆகியோரின் அன்பு மாமனாரும் ரமேஸகுமார், சாரதா, டினேஸ்குமார், ரமணன், லிஷான், நிரோஷன் (தேசிய சேமிப்பு வங்கி, திருநெல்வேலி), தனுஷன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி, தரம்-9), பிரவீண (France), கிஷானி, தர்ஷினி (Australia) ஆகியோரின் பாசமிகு பேரனும் பரமலிங்கம் (Canada) அவர்களின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2004) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"பாக்கிய இல்லம்"*
*51, சந்தனமாதா வீதி,*
*சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.*
*தொ.பே. 222 5466* (31826)(37-13-14)

தகவல்:
தி.கைலைநாதன் (மகன்)
(CHF INTERNATIONAL)

# 'கனகசெந்தி கதா விருது' இம்முறை நால்வருக்கு

## பெயர் விவரம் வெளியானது

யாழ்ப்பாணம்,மே10

சிறந்த சிறுகதைகளுக்காக வழங்கப்பட்டுவரும் 'கனகசெந்தி கதா விருது' இம்முறை நான்கு சிறுகதைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கனகசெந்தி கதா விருதுக்குழு இவ்விருதுபெறும் நால்வரின் பெயர் விவரங்களை அறிவித்துள்ளது.

'வேட்டை' (தினக்குரல் பத்திரிகையில் வெளியானது) என்ற சிறுகதைக்காக புலோலியூர் ஆ.இரத்தினவேலோனுக்கும், 'ஜலசமாதி' (தினகரன் பத்திரிகையில் வெளியானது) என்ற சிறுகதைக்காக ஏ.எஸ். உபைத்துல்லாவுக்கும் 'வீடு' (தினகரன் பத்திரிகையில் வெளியானது) என்ற சிறுகதைகாக சி.கதிர்காமநாதனுக்கும், 'கருவேலங்காடுகள் தாண்டி' (தினகரன் பத்திரிகையில் வெளியானது) என்ற சிறுகதைக்காக எம்.என். அமானுல்லாவுக்கும் இந்த விருது வழங்கப்படவுள்ளது.

இவர்களுக்கான விருதுகள் எதிர்வரும் ஜூன் மாதம் 6ஆம் திகதியன்று யாழ்.நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும்.

இலங்கை இலக்கியப்பேரவையின் பரிசளிப்பு விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளன. (எ-9)

### மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்சந்திப்பில் எழிலன் தொடர்ந்தும் அங்கு கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

18 வயதிற்குக் குறைந்தவர்களை இயக்கத்தில் சேர்த்துக்கொள்ளும் திட்டம் இல்லை. ஆனால், அவர்கள் குடும்பப் பொருளாதார சூழல், போராட்டத்தினால் ஏற்பட்ட இழப்பு, இராணுவக் கெடுபிடிகளினால் நிலவும் அச்சம், போராட்ட உத்வேகம் போன்றவை காரணமாக அமைப்பில் இணைந்து கொள்கிறார்கள்.

அவர்களை நல்வழிப்படுத்திச் சரியான பாதைக்கு இட்டுச்செல்வது அமைப்பின் கடமை. வயது ஒரு பிரச்சினையே. போராட்டத்திற்கு வயது ஒரு தடையல்ல. என்ன காரணத்திற்காக இணைந்து சிறுவர்கள் போராட முன்வந்துள்ளார்கள் என்று சிந்திக்க வேண்டும். சிறுவர்கள் போராட வேண்டிய நிலை எழாதவாறு பார்க்கவேண்டும் - என்றார்.

கிழக்கு மாகாணத்தில் அண்மையில் தோன்றிய நிலைமை மக்கள் மத்தியில் குழப்பத்தைத் தோற்றுவித்தது. இதனை நீக்கிவைத்தவை ஊடகங்கள் என்றும் மெச்சிப் பேசினார் எழிலன். (எ-187)

### இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருமலை வீதி, தாண்டவன்வெளியில் தேவாலயம் முன்னால் இவர்கள் இறங்க முற்பட்டபோது பஸ்ஸில் இவர்களுடன் பயணம் செய்தவர் என்று கருதப்படும் ஒருவர் இவர்களில் ஒருவரை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தார் என்று கூறப்படுகின்றது. ஒரு சிப்பாய் சூடுபட்டு விழ மற்றவர் ஓடித் தப்பினார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வேட்டுக்களைத் தீர்த்தவர் தலைமறைவானார்.

பஸ்ஸுக்குள் மூன்று வெற்று ரவைக் கூடுகள் காணப்பட்டன.

தலையில் சூடுபட்டு இறந்த சிப்பாயின் சடலம் மட்டக்களப்பு வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு மாவட்ட பதில் நீதிவான் விேனாபா இந்திரன் மரணவிசாரணைகளை மேற்கொண்டார்.

இராணுவத்தினரும் பொலீஸாரும் இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வருகின்றார்கள். எனினும், இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. இந்தச் சம்பவம் தொடர்பாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளோம். அதே வேளை, மட்டக்களப்பு பொலீஸார் இந்தச் சம்பவம் குறித்து பூரண விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமேத பெரேரா தெரிவித்துள்ளார். (எ-ரி)

### கூட்டுக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டுக்கு இணங்கியமை -

ஆகிய மூன்று விடயங்களே ஜே.வி.பியை சீற்றம்கொள்ள வைத்திருக்கின்றன. தவிரவும், அனுசரணைப் பணியில் மீண்டும் நோர்வேக்கு முக்கியத்துவம் அளித்ததும், இந்தியாவுக்கு உரிய பங்களிப்பு வழங்கப்படாமையும்கூட ஜே.வி.பிக்குள் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கின்றன எனத் தெரிகின்றது.

ஜே.வி.பியின் உயர் மட்டக் குழு இன்று கூடி, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இந்த முடிவுகள் குறித்து ஆராயவுள்ளது என அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

ஜே.வி.பியின் மக்கள் இயக்கமான 'தேச் ஹித்தேசி ஜாதிக வியாபாரய' (டி.ஜே.வி.) அமைப்பு ஜனாதிபதியின் முடிவுகளை உடனடியாக வாபஸ் பெறும்படி கோரியுள்ளதோடு, புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக சபை யோசனையை அடிப்படையாகக் கொண்டு பேச்சுக்களை ஆரம்பிப்பதை தேசத்துரோகம் எனவும் வர்ணித்துள்ளது.

தேசபக்த இயக்கம் என்று தன்னைக் கூறிக்கொள்ளும் இந்த அமைப்பில் சிங்களப் புத்திஜீவிகள், பிக்குமார், மாணவர்கள், விவசாயிகள் எனப் பலதரப்பட்டோர் ஒருங்கிணைந்துள்ளனர். கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றியீட்டுவதற்கு இந்த அமைப்பு முக்கிய காரணம் ஏன்பது குறிப்பிடத்தக்கது.

ஜே.வி.பி. இன்று காலை நடைபெறும் தனது கட்சியின் உயர் மட்டக் கூட்டத்தின் பின்னர் இவ்விடயம் தொடர்பான தனது நிலைப்பாட்டை வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுத் தேர்தலுக்கு முன்னரும், பின்னரும் அடிக்கடி செய்தியாளர் மாநாடுகளைக் கூட்டி, அதிரடி அரசியல் கருத்துக்களை வெளியிட்டு வந்த ஜே.வி.பியின் மூத்த தலைவர்கள், சமாதான முயற்சிகள் தொடர்பாக ஜனாதிபதி அண்மைக்காலத்தில் திடீர் அறிவிப்புக்களையும், முடிவுகளையும் வெளியிடத் தொடங்கிய பின்னர் செய்தியாளர் மாநாடுகளைக் கூட்டுவதையும் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு நேரடியாக முகம் கொடுப்பதையும் தவிர்த்து வருகின்றனர் என்பது கவனிக்கத்தக்கது. (எ-க)

## வைகோ வழக்கை தமிழக அரசு மீளப்பெறுகிறது!

லண்டன்,மே10

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ மற்றும் அவரது 8 நண்பர்கள் மீதான பொடா வழக்கை மறுபரிசீலனை செய்யுமாறு தமிழக அரசு தமது சிறப்பு வழக்கறிஞர் ஜெயக்குமாருக்கு உத்தரவிட்டுள்ளது.

இன்று திங்கட்கிழமை தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இந்திய நாடாளுமன்றத்துக்கான இறுதிக்கட்டத்தேர்தல் வாக்குப்பதிவு நடைபெறவுள்ள இந்த வேளையில் தமிழக முதல்வர் ஜெயலலிதா வழக்கை திரும்பப் பெறுவதற்கு முடிவு செய்திருப்பது அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (எ-9-ரி)

### அமெரிக்காவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கும் இடையிலான உறவுகள் என்பன உட்பட பல விடயங்கள் ஆராயப்படவுள்ளன. அவற்றில் பாதுகாப்பு ஒப்பந்த விவகாரமும் ஒன்று எனத் தெரிகின்றது.

சமாதானப் பேச்சு உட்பட ஏனைய விவகாரங்களின் இலங்கையின் போக்கையும் நிலைப்பாட்டையும் கதிர்காமர் அமெரிக்க வெளிவிவகார அமைச்சருக்கு விளக்குவார் எனத் தெரியவருகிறது.

யுத்த நிறுத்தத்தின் தற்போதைய நிலை, அபிவிருத்திக்கான நிதி என பனவும் சந்திப்பின்போது ஆலோசிக்கப்படும் என அறியமுடிகிறது.(க)

### யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வினர் ஒருவரை அழைத்து வருவதற்காக புறக்கோட்டையில் இருந்து ஹைஏஸ் வான் ஒன்றில் இவர்கள் சென்றுகொண்டிருந்தனர்.

கந்தானைச் சந்தியைத் தாண்டி வான் சென்றுகொண்டிருந்த சமயம், நேர் எதிரே வாகனங்கள் வரிசையாக வந்துகொண்டிருந்தன என்றும் -

அந்த வாகனங்களின் நடுவே வந்த பயணிகள் பஸ் ஒன்று திடீரென வரிசையை விட்டு விலகி வானுடன் நேருக்குநேர் மோதியது என்றும் - வானில் பயணித்த ஒருவர் தெரிவித்தார்.

சாரதியின் இருக்கைக்குப் பக்கத்தில் பஸ் மோதியதால் சாரதியும், அதற்குப் பின்னால் இருந்த ஆசிரியையும் பலத்த காயங்களுக்கு உள்ளாகி அந்த இடத்திலேயே உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் வானில் பயணித்த இறந்தவரின் கணவரான பசுபதி பாலகுமரன் (வயது40), பசுபதி பாலமுகுந்தன்(வயது 35), திருஞானசம்பந்தர் சிவமலர் (வயது 34), என்.சுப்பிரமணியம் (வயது70) ஆகியோர் காயமடைந்தனர். இவர்களில் பாலமுகுந்தன், சிவமலர் ஆகியோர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏனையோர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர்.

உயிரிழந்த இருவரின் சடலங்களும் மரண விசாரணையின் பொருட்டு றாகம வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

பயணிகள் பஸ்ஸின் சாரதி பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்காகத் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.

இசசம்பவத்தில் உயிரிழந்த ஆசிரியையும் அவரது குடும்பத்தினரும் வெளிநாட்டில் இருந்து வரும் உறவினரை அழைத்துவருவதற்காக நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்றிருந்தனர். (எ-3-7)

## ஹாட்லியில் கணனித்தொகுதி எரிந்து நாசம் என முறைப்பாடு

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த கணனித் தொகுதி எரிந்து நாசமாகியுள்ளது என்று பருத்தித்துறைப் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கணனித் தொகுதி அமைந்திருந்த அறையின் பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு புகை மண்டலம் காணப்பட்டதாக அப்பகுதி மக்கள் பாடசாலை நிர்வாகத்துக்குத் தெரியப்படுத்தினர் என்றும் -

மறுநாள் தாம் அங்கு சென்று பார்த்தபோது மூன்று குளிரூட்டிகள், 30 கணனிகள் அத்தோடு இணைந்த உதிரிப்பாகங்கள் எரிந்த நிலையில் காணப்பட்டன என்றும் -

பாடசாலை நிர்வாகம் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளது.

மின்ஒழுக்கு காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் எனத் தாம் சந்தேகிப்பதாகவும்-

இந்தச் சம்பவத்தால் ஏற்பட்ட சேதம் 35 லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது என்றும் -

அவர்கள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர் எனக் கூறப்பட்டது.

வடமராட்சி வலயக் கல்வி பணிப்பாளர் பி.செல்வரத்தினம் சம்பவம் நடைபெற்ற இடத்தை நேரில் சென்று பார்வையிட்டுள்ளார். (எ-3-70)

## செச்சினிய ஜனாதிபதி குண்டுவெடிப்பில் பலி!

குரோஸ்னி,மே10

ரஷ்யாவுக்கு ஆதரவு தெரிவித்து வந்த செச்சினிய ஜனாதிபதி அஹ்மத கதீரோ நேற்றைய குண்டுவெடிப்பில்



கொல்லப்பட்டார்; அவருடன் இருந்த இருபது பேரும் உயிரிழந்தனர்.

செச்சினிய தலைநகர் குரோஷ்னியில் 'வெற்றித்தினம்' எனும் வருடாந்த இராணுவவிழா நேற்று நடந்தது. நிகழ்வில் பங்கேற்று அஹ்மத் கதீரோ முக்கியஸ்தர்களுக்காக ஒதுக்கப்பட்ட பார்வையாளர் பகுதியில் அமர்ந்திருந்தார். அவர் அமர்ந்திருந்த அதே பகுதியில் குண்டும் வெடித்தது. ஜனாதிபதி கொல்லப்பட்டார். மற்றும் இருபதுக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

குரோஸ்னி பகுதிக்கான ரஷ்ய இராணுவத் தளபதி பலரிபாரனோவும் படுகாயமுற்று வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். மூன்று மாதகாலமாக நிகழ்ச்சி நடந்த இடம் திருத்த வேலைக்குட்பட்டிருந்தது.

அதன்போது இந்தக் குண்டு மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

விழாவுக்கு முன்னர் மூன்று நாள்களாக பலத்தபாதுகாப்பும் தேடுதலும் மேற்கொள்ளப்பட்டன. அதன் போது இக்குண்டு கண்டுபிடிக்கப்படவில்லை.

ரஷ்யாவிலிருந்து பிரிந்து செச்சினியா தனிநாடாக - சுதந்திரமாக - செயறபடவேண்டும்என்று முஸ்லிம்கள் போராடி வருகின்றனர்.அதற்கு கதீரோ முன்னர் ஆதரவு வழங்கியிருந்தார்.

செச்சினியப் பிரதேசத்தின் ஜனாதிபதியாக தெரிவானதும் அவர் ரஷ்யாவின் கூட்டாளியாக மாறினார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-9-ரி)

### கருத்தரங்கு

'ரிஷி காளான் மூலிகை உப உணவுகளும் அவற்றின் மருத்துவ பயன்களும்' என்ற தலைப்பிலான கருத்தரங்கு இன்று மாலை 4.30 மணிக்கு ஆவரங்கால் நவோதயா சனசமூக நிலையத்திலும் மாலை 6.30 மணிக்கு இடைக்காடு மாணிக்க இடைக்காடர் சனசமூக நிலையத்திலும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கண்ணம்மா கந்தையா

புளியங்கூடல் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கண்ணம்மா கந்தையா அவர்கள் நேற்று (09-05-2004) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா கந்தையா (பொ.க) வின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னையா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - தெய்வானை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற குருசாமி மற்றும் இரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரியர் - கொழும்பு), நடராசா (கனடா), நாகம்மா (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தனலட்சுமி (கனடா), மார்க்கண்டு (கனடா), மங்களாதேவி, ஸ்ரீநிவாசன், பேரின்பரதி (கனடா), இராமச்சந்திரன் (கனடா), யோகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-05-2004) திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுருவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புளியங்கூடல் தெற்கு,*
*ஊர்காவற்றுறை.*
(சி-34793) (43-13-17-32)

தகவல்:
கந்தையா ஸ்ரீநிவாசன்
(மகன்).

### கனகலிங்கம் தியாகராசா (கார் மெக்கானிக்)

கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகலிங்கம் தியாகராசா நேற்று (09-05-2004) ஞாயிற்றுக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகலிங்கம் - வியாழாச்சியின் அன்பு மகனும காலஞ்சென்ற சுப்பிரமணியம் - நவமணியின் அன்பு மருமகனும் கனகேஸ்வரியின் அன்புக் கணவரும் லோகேஸ்வரி, அகிலேஸ்வரி, இலங்கேஸ்வரி, கேதீஸ்வரி, அனுறா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற வரதராஜன், கமலராணி, லோகதாசன், மனோஹர், லோகேஸ்வரன், குமணன் (கனடா), ஜூட்அன்ரனி, இரகுநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் அதிசயராஜன், சுலக்ஷன், அபிலக்ஷன், விஷ்ணுகா, விஷ்ணுகாந், சிவகரன், திக்சாந், தக்சாந், புருசோத், தக்ஷிகா (லண்டன்), சபரீசன் ஆகியோரின் பாசமிகு பேரனாரும் கலாமதியின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10.05.2004) திங்கட்கிழமை பி.ப 4மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மிஷன் பாடசாலை வீதி.*
*கோண்டாவில் கிழக்கு.*
*கோண்டாவில்.* (31834)(13-17-32)

தகவல்:-
தி.கனகேஸ்வரி
(மனைவி).

CHEMISTRY
(GROUP CLASSES)
(2006)
DIAS B.Sc.(Hons) Spl.
* BASIC * GENERAL
புதிய பிரிவுகள் ஆரம்பம்
104/4 Cross Rd, Athiyady.
(31830)(43)

NEW SCIENCE COLLEGE
இணைந்த கணிதம்(A/L-2005)
(விடுமுறை கால வகுப்புகள்)
தொகையீடு
செவ்வாய், வியாழன்- (12-1.30)
ஆரம்பம்:-11-05-2004
By: P.SENTHILNATHAN (B.Sc)
(31829)(43)

பருத்தித்துறை சென்தோமஸ் சனசமூக நிலைய கல்வி வளர்ச்சிக்கான
அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள் - 2004

1ஆம் பரிசு இல 7567, 2ஆம் பரிசு இல 1922, 3ஆம் பரிசு இல 4046

ஆறுதல் பரிசுக்குரிய இலக்கங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. 7519 | 2. 753 | 3. 5201 | 4. 1586 |
| 5. 3425 | 6. 7533 | 7. 674 | 8. 541 |
| 9. 3879 | 10. 651 | | |

(சி-34791)(32-13-17) - நிர்வாகம்

வீடுமுறை வகுப்புகள்
Direct Start
காலம் 2 வாரம்
Dip. in MS Office
Internet and e.mail
Children Programming
Dip. in Desktop Publishing
Dip. in Hardware Technology
மேலதிக தொடர்புகளுக்கு
STP Your Partner in IT solution
73, Palaly Road, Kantharmadam,
T.P:021-222-2674

பல் வைத்திய சேவை
சகல விதமான பல் வைத்திய தேவைகளுக்கும்
காலை 9 மணி - 12 மணிவரை
மாலை 4 மணி - 6 மணிவரை
பல் வைத்தியப் பிரிவு, யாழ்.வைத்திய நிலையம்.
பிலிப் நேர்சிங் ஹோம் கட்டடம்.
228, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(31793)(40)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.05.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.